# VETRII IAS STUDY CIRCLE

## TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## ஜனவரி - 2020

ISO 9001 : 2015

An ISO 9001 : 2015 Institution | Providing Excellence Since 2011


**Head Office**

Old No.52, New No.1, 9th Street, F Block, 1st Avenue Main Road,
(Near Istha siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600102.

**Phone: 044-2626 5326 | 98844 72636 | 98844 21666 | 98844 32666**

**Branches**

**SALEM**

No.189/1, Meyanoor Road, Near ARRS Multiplex, (Near Salem New bus Stand), Opp. Venkateshwara Complex, Salem - 636004.

**0427-2330307 | 95001 22022**

**KOVAI**

No.347, D.S.Complex (3rd floor), Nehru Street,Near Gandhipuram Central Bus Stand, Ramnagar, Kovai - 9

**75021 65390**

**Educarreerr Location**

**Vivekanandha Educational Institutions for Women,**

Elayampalayam, Tiruchengode - TK Namakkal District - 637 205.

**04288 - 234670 | 91 94437 34670**

**Patrician College of Arts and Science,**

3, Canal Bank Rd, Gandhi Nagar, Opposite to Kotturpuram Railway Station, Adyar, Chennai - 600020.

**044 - 24401362 | 044 - 24426913**

**Sree Saraswathi Thyagaraja College**

Palani Road, Thippampatti, Pollachi - 642 107

**73737 66550 | 94432 66008 | 90951 66009**

# இயக்குநர் வாழ்த்து மடல்



எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.
பொருள் :
ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்தபடியே செயல்புரிவதில்
உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிபணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுபடுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்பட்டு அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

**மு. சண்முகம்**
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ். பயிற்சி நிறுவனம்

---

*Published by*

**VETRII IAS STUDY CIRCLE**
F Block New No. 1, 9th Street, 1st Avenue main Road, Chinthamani, Anna Nagar (E), Chennai – 102.
Phone: 044 – 26265326 / 9600124042 / 9840097666
www.vetriias.com
E-Mail: vetriiias@gmail.com / vetriiias2011@gmail.com / vetriiias2018@gmail.com
Feedback: vetriiiasmaterials@gmail.com

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்


1 - 12 **வரலாறு**





▪முக்கிய தினங்கள் ▪உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ▪பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் ▪சிறந்த நபர்கள் ▪விளையாட்டு ▪புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள் ▪விருதுகள் மற்றும் கௌரவங்கள் ▪கலாச்சாரம் ▪சமீபத்திய வரலாற்று நகழ்வு ▪இந்தியா மற்றும் அண்டை நாடுகள் ▪நியமனங்கள்

13- 15 **அரசியல் அறிவியல்**





▪இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ▪சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள் ▪பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள் ▪அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள் ▪மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

16- 17 **புவியியல்**




▪சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

18 - 19 **பொருளாதாரம்**




▪புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை


20 - 24 **அறிவியல்**


- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

25 **தினசரி தேசிய நிகழ்வு**

34 **சர்வதேச நிகழ்வு**


36 **தமிழ்நாடு**







# 1. வரலாறு





## 1.1 முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| **ஜனவரி 4** | உலக பிரெய்லி தினம் | |
| **ஜனவரி 9** | பிரவாசி பாதிய திவாஷ் | ▪ 16வது பிரவாசி பாரதிய திவாஸ் ஜனவரி 9, 2020ல் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ இந்தியாவின் வளர்ச்சிக்கு பங்களித்த வெளிநாட்டு இந்தியர்களை அங்கீகரிப்பதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.<br>**காரணம்**<br>▪ கடந்த 1915 ஜனவரி 9 அன்று தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியாவிற்கு காந்தியடிகள் திருப்பினார். இதை முன்னிட்டு கடந்த 2013ஆம் ஆண்டு முதல் இத்தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்திய அரசால் கடந்த 2018 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் கடைபிடிக்கப்பட்டது. |
| **ஜனவரி 10** | உலக ஹிந்தி தினம் | |
| **ஜனவரி 12** | தேசிய இளைஞர் தினம் | ▪ தேசிய இளைஞர் தினம் விவேகானந்தர் பிறந்த தினமான ஜனவரி 12 ஆனது ஆண்டுதோறும் தேசிய இளைஞர் தினமாக சிறப்பிக்கப்படுகிறது.<br>▪ *Fit Youth Fit India* |












# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### முப்படைத்தளபதி தலைமையில் ராணுவ விவகாரங்கள் துறை

- புதிதாக நியமிக்கப்பட்டுள்ள முப்படை தளபதி தலைமையில் ராணுவ விவகாரங்கள் துறை என்ற புதிய துறையை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.
- ராணுவத் தளபதியாக இருந்த பிபின் ராவத்தை நாட்டின் முதல் முப்படை தளபதியாக மத்திய அரசு நியமித்தது.
- இந்நிலையில் அவரது தலைமையில் ராணுவ விவகாரங்கள் துறை என்ற புதிய துறையை மத்திய அரசு உருவாக்கியுள்ளது.
- ராணுவம் தொடர்பான விஷயங்களில் அரசுக்கு ஆலோசகராக பிபின் ராவத் செயல்படுவார்

### "டோர்னியர்" விமானப் படையில் இணைப்பு

- இலகுரக "டோர்னியர்-228" போர் விமானம், விமானப் படையின் 41-ஆவது பிரிவில் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டது.
- புதியதலைமுறை தொழில்நுட்பங்கள்அடங்கிய "டோர்னியர்" ரக போர் விமானங்களை ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் (ஹெச்ஏஎல்) "இந்தியாவில் தயாரிப்போம்" திட்டத்தின் கீழ் தயாரித்து வருகிறது.
- முதலாவது "டோர்னியர்-228" போர் விமானம் கடந்த நவம்பர் மாதம் 19-ஆம் தேதி விமானப்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

### சென்னையில் கடல்சார் பாதுகாப்பு சர்வதேச பயிலரங்கு

- கடல் பாதுகாப்பு மற்றும் கடல் ஆய்வு மேம்பாடு குறித்த சர்வதேசப் பயிலரங்கம் சென்னையில் வரும் 6-ஆம் தேதி முதல் 10ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- மத்திய புவி அறிவியல் அமைச்சகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பயிலரங்குகள் தேசிய கடல் சார் தொழில்நுட்ப நிறுவனத்தில் (என்ஐஓடி) நடைபெற உள்ளன.
- இதில் அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, பிரான்ஸ், இலங்கை, சவூதி அரேபியா, குவைத், தான்சானியா, வங்கதேசம், மாலத்தீவு, காங்கோ உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

### I-STEM போர்டல்

- 107வது இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாடு பெங்களூரில் நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- I-STEM என்பது Indian Science, Technology Engineering Facilities Map என்பதாகும். ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பயனாளர்கள் தங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளுக்குத் தேவையான வசதிகளை கண்டறிவதற்கான ஒரு தளமாக இந்த போர்டல் செயல்படும்.

### நாசிம்-அல்-பாஹர் பயிற்சி

- இந்தியா மற்றும் ஓமன் நாடுகளுக்கு இடையேயான கடற்படை பயிற்சியின் 12வது பதிப்பு கோவா மாநிலத்தில் நடைபெற்றது. இரு நாடுகளுக்கு இடையே கடந்த 1993ஆம் ஆண்டு முதல் இப்பயிற்சி நடத்தப்படுகிறது.

### மகா கப்பற்படை இணைப்பு 2020

***(First Maha Navy Connect 2020)***

- முதல் முப்பரிமாண பயணம் "மகா கப்பற்படை இணைப்பு 2020" இந்திய கப்பற்படையால் மும்பையில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்திய கப்பற்படையின் பாரம்பரியத்தை மேம்படுத்துவதையும், மகாராஷ்ராவில் உள்ள கடலோர சமூகங்களுக்கிடையே கடலோர பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

## கடற்படையில் அடுத்த ஆண்டு இணைகிறது "ஐஎன்எஸ் விக்ராந்த்"

- இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் முதல் விமானம் தாங்கி கப்பலான "ஐஎன்எஸ் விக்ராந்த்", அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கடற்படையில் முறைப்படி இணைக்கப்படும் என்று கடற்படை தெரிவித்துள்ளன. இந்தக் கப்பல் கேரள மாநிலம் கொச்சியில் உள்ள "கொச்சி ஷிப்யார்டு" நிறுவனத்தால் கட்டப்பட்டு வருகிறது. உலகின் 20வது மிக நீளமான கப்பல் 262மீ ஆகும்

## மிலன் 2020

- விசாகப்பட்டினத்தில் "மிலன் பயிற்சி" மார்ச் 2020ல் இந்திய கப்பற்படை நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளது. இதற்காக கிழக்கு கடற்படையில் ஜனவரி 7ல் தலைமைத் தளபதி அட்மிரல் எஸ்என் கோர்மெட் அவர்களால் பணிகள் தொடங்கப்பட்டன.
- 41 நாடுகளின் கப்பல் படைகள் மிலன் 2020 பயிற்சியில் பங்கேற்க உள்ளன.
- விசாகப்பட்டினம், கடந்த பிப்ரவரி 2016இல் சர்வதேச கடற்படை ஒத்திகையை நடத்தியது.

## இராணுவ விவகாரங்கள் துறைக்கான வணிக விதிகளுக்கு ஒப்புதல்

- இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள இராணுவ விவகாரங்கள் துறைக்கு வணிகம் செய்வதற்கான விதிகளுக்கு ஒப்புதல் வழங்கி உள்ளார்.
- பிபின் ராவத் தலைமையிலான இராணுவ விவகார துறையில் இரண்டு இணை செயலாளர்கள், 13 துணை செயலாளர்கள், 25 கீழ் செயலாளர்கள் மற்றும் 22 பிரிவு அதிகாரிகள் இருப்பார்கள்.

## அரபிக்கடலில் இந்திய போர்க்கப்பல்

- பாகிஸ்தானும், சீனாவும் 9 நாள் கடற்படை கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுவரும் நிலையில், இந்திய கடற்படைக்குச் சொந்தமான விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ரமாதித்யா, அரபிக் கடலில் நிறுத்தப்பட்டுள்ளது.
- அரபிக் கடலின் வடக்குப் பகுதியில் 9 நாள் கூட்டு ராணுவப் பயிற்சியை பாகிஸ்தானும், சீனாவும் தொடங்கின.
- காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா-பாகிஸ்தான் இடையே கருத்து வேறுபாடு இருந்துவரும் நிலையில்இந்தப்பயிற்சிமேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## *INS* விக்ரமாதித்யா

- இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட இலகுரக MK1 ரக விமானங்கள் உள்நாட்டிலேயே தாயரிக்கப்பட்ட விமானம் தாங்கி போர்க்கப்பலான விக்ரமாதித்யாவில் இறக்கியும், மீண்டும் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
- விமானம் தாங்கி கப்பல்களில் தத்தமது நாட்டின் விமானங்களை பயன்படுத்தும் வசதிகளை கொண்ட சில நாடுகளின் வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளது.
- இது வரையில் இந்தியாவின் விக்ரமாதித்யாவில் MIG-26K விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக தற்பொழுது MK1 இலகு ரக விமானங்கள் இணைக்கப்பட உள்ளது.

**கடலோர காவல் படைக்கு இரண்டு புதிய கப்பல்கள்**




- *அன்னிபெசன்ட் அம்ரித் கௌர் என்ற இரண்டு மிகப்பெரிய புதிய கடலோர காவல் படை கப்பல்கள் கொல்கத்தாவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.*
- *அன்னிபெசன்ட் கப்பலானது சென்னை வட்டார கடலோர பாதுகாப்பிற்கும், அம்ரித் கௌர் ஹால்தியா பகுதி பாதுகாப்பிற்கு பயன்படுத்தப்பட உள்ளன.*
- *அதி நவீன தொழில்நட்பங்கள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன. துப்பாக்கிகளும், ஏவுகணைகள் ஏவக்கூடிய வசதிகளும் பொருத்தப்பட்டுள்ளன.*

# 1.3 உலக அமைப்புகள் - உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

**14வது உலகளாவிய சுகாதார மாநாடு**

- *இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கர்களின் சங்கம், இந்திய அமெரிக்க மருத்துவர்களுக்கான தொழில்முறை சங்கம் ஆகியவை இணைந்து ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் 14வது உலகளாவிய சுகாதார மாநாடு 2020ஆம் ஆண்டு ஜனவரியில் முதல்முறையாக நடத்த உள்ளது.*
- *இந்த உச்சி மாநாட்டில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொள்ள உள்ளன.*

**இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க சங்கம்**

- *தொடக்கம் – 1984*
- *தலைமையகம் – அமெரிக்கா*

# 1.4 சிறந்த நபர்கள்

### 2020 ஆண்டை "செவிலியர் மற்றும் மருத்து வச்சி" ஆண்டு என அறிவித்துள்ளது

- புளோரன்ஸ் நைட்டிங்கேலின் 200வது பிறந்த நாளை முன்னிட்டு உலக சுகாதார அமைப்பு 2020 ஆண்டை "செவிலியர் மற்றும் மருத்துவச்சி" ஆண்டு என்று அறிவித்துள்ளது.


**புளோரன்ஸ் நைட்டிங்கேல்**

- செவிலியர்களுக்கான பயிற்சிப் பள்ளியை முதன்முதலில் துவக்கியவர் புளோரன்ஸ் நைட்டிங்கேல் *(Florence Nitingale)* ஆவார். போரில் உயிருக்காகப் போராடிய ராணுவ வீரர்களுக்கு ஆதரவு கொடுத்து அன்புடன் மருத்துவ சேவை புரிந்ததால் அவரை *(The Lady With the Lamp)* என்று மக்களால் இன்றுவரை அழைக்கப்படுகிறார். 1820ஆம் அண்டு மே 12 அன்று பிறந்தார்.
- 1965 ஆம் ஆண்டு முதல் இவர் பிறந்த மே 12ஆம் தேதியை உலக செவிலியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

### குரு கோபிந்த் சிங் நினைவு தினம்

- சீக்கிய மதகுருவின் 10வது குருவான குரு கோபிந்த் சிங்கின் பிறந்த நாள் ஜனவரி 5ஆம் தேதி இந்தியா கொண்டாட உள்ளது. இவர் ஜனவரி 5, 1666 ஆம் ஆண்டு பிறந்தார்.
- குரு நானக் சீக்கிய மதத்தை 1469 ஆம் அண்டு தோற்றுவித்தார். சீக்கிய மதத்தில் குரு கோவிந்த சிங் கடைசி சீக்கிய மதகுரு ஆவார்.

### சாவித்ரிபாய் பூலேவின் பிறந்த நாளுக்கு மரியாதை செலுத்திய பிரதமர் மோடி



- பிரதமர் மோடி சாவித்ரிபாய் பூலே பிறந்த நாளை (ஜனவரி 3) முன்னிட்டு அவருக்கு மரியாதை செலுத்தினர்.
- சாவித்ரிபாய் பூலே மற்றும் அவரது கணவர் ஜோதிராவ் பூலே ஆகியோர் இந்தியாவின் முதல் பள்ளியை புனேவில் 1848இல் திறந்தனர்.

**சாவித்ரிபாய் பூலே**

- சாவித்ரிபாய் பூலே "இந்திய பெண்ணிவாதிகளின் தாய் *("Mother of Indian Feminism")* என்று கருதப்படுகிறார்.

### ஒன்றியக்குழு உறுப்பினரான திருநங்கை



- நாமக்கல்லில் உள்ள தென்னிந்திய திருநங்கையர் கூட்டமைப்பினரிடம் திருச்செங்கோடு ஒன்றியக் குழு உறுப்பினராக வெற்றி பெற்ற (First) திருநங்கை ரியா.

### சுதந்திர போராட்ட தியாகி பீம்சந்திர ஜனா


- மேற்கு வங்க மாநிலம், ஹௌரா மாவட்டத்தில் வயது மூப்பு காரணமாக ஏற்படும் நோய்களால் பாதிக்கப்பட்டு நூற்றாண்டு கடந்த சுதந்திர போராட்ட வீரர் பீம்சந்திர ஜனா காலமானார்.
- 1930- ஆம் ஆண்டில் தனது 17-ஆவது வயதில் முதன்முறையாக ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெளிநாட்டுப் பொருள்களைப் பயன்படுத்த எதிர்ப்பு தெரிவித்து கைது செய்யப்பட்டார்.
- 'சுதந்திரத்திற்குப் பின் ஜனாவுக்கு இந்திய அரசு விருது வழங்கி கௌரவித்தது

### உலகின் இளம் பிரதமரானார் ஆஸ்திரியாவின் செபாஸ்டியன் குர்ஸ்




- ஆஸ்திரியா நாட்டில் நடந்த பொதுத்தேர்தலில் செபாஸ்டியன் குர்ஸ் (33) வெற்றி பெற்று, உலகின் இளம் பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார். ஆஸ்திரியா நாட்டின் பொதுத்தேர்தலில் செபாஸ்டியன் குர்ஸின் தலைமையிலான கன்சர்வேடிவ் மக்கள் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

### ஓவியர் அக்பர் பதம்ஸீ காலமானார்



- புகழ்பெற்ற ஓவியரும், பல்கலை வித்தகருமான அக்பர் பதம்ஸீ காலமானார்.
- பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் குறித்த விவேகானந்தரின் விளக்கங்களால் ஈர்க்கப்பட்ட இவர், சிற்பக் கலை குறித்த பண்டைய நூலான ஷில்ப சாஸ்திரத்தையும் படித்தவர்.
- இந்தியாவின் தலைசிறந்த நவீன கால ஓவியர்களில் ஒருவராகப் புகழ்பெற்ற அக்பர் பதம்ஸீ

### ஓமன் மன்னர் காபூல் பின் சையத் மரணம்



- ஓமன் நாட்டின் மன்னர் காபூல் பின் சையத் (79) காலமானார். இதைத் தொடர்ந்து அந்த நாட்டின் புதிய மன்னராக ஹைதம் பின் தாரிக் பதவியேற்று கொண்டார்.

### அந்தமானில் கருணாநிதி சிலை



- முன்னாள் தமிழக முதலமைச்சர் சிலை அந்தமான தீவில் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- 5 முறை தமிழக முதலமைச்சராக பதவி வகித்த திரு. கருணாநிதி 2018ம் ஆண்டு காலமானார்.

### அதிபர் சாய் இங்-வென் மீண்டும் அபார வெற்றி



- தைவானில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், தற்போதைய அதிபர் சாய் இங்-வென் மீண்டும் அபார வெற்றி பெற்றுள்ளார். 57 சதவீத வாக்குகள் பெற்று சாய் இங்-வென் முன்னிலை பெற்றார்.

## 1.5 முக்கிய இடங்கள்

### கீழடி அகழ்வாய்வுகள் பற்றி 24 இந்திய மொழிகளில் நூல் வெளியிடப்பட உள்ளது



- கீழடி அகழ்வாய்வுகள் பற்றிய குறிப்புகள் அடங்கிய புத்தகம் 24 இந்திய மொழிகளில் வெளியிடப்பட உள்ளன. மேலும் இதன் நகல்கள் தொல்லியல் துறையில் கிடைக்க உள்ளது.
- இந்த புத்தகங்கள் தொல்லியல் துறை மற்றும் தமிழ்நாடு புத்தகங்கள் கழகம் இணைந்து வெளியிடுகிறது.

# 1.6 விளையாட்டு

### ரொனால்டோவுக்கு குளோப் சிறப்பு விருது



- ஜுவென்டஸ் அணி வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஐரோப்பிய சிறந்த கால்பந்து வீரருக்கான தங்கக் காலணி விருதை 6-ஆவது முறையாக வென்றார்.

### மூன்றாவது கேலோ இந்தியா விளையாட்டு போட்டி

- அசாம் மாநில தலைநகர் கௌஹாத்தியில் மூன்றாவது கேலோ இந்தியா விளையாட்டு போட்டி நடைபெற உள்ளது. இதில் “சைக்ளிங்” மற்றும் “Lawn bowls” ஆகிய இரண்டு விளையாட்டுகள் இணைக்கப்பட உள்ளன.

### வின்சன் மாசிஃப் சிகரத்தை அடைந்த முதல் இந்திய பெண்



- தெலங்கானாவை சேர்ந்த மலாவத் பூர்ணா, அண்டார்ட்டிக்காவின் மிக உயரமான மவுண்ட் வின்சன் மாசிஃப் உயரத்தை (4892) அடைந்து சாதனை படைத்துள்ளார்.
- ஆறு கண்டங்களில் உள்ள ஆறு மிக உயரமான மலைகளை அடைந்த முதல் பழங்குடியின பெண் இவராவார்.
- இவர் தெலங்கானாவில் உள்ள நிசாமாபாத் மாவட்டத்தை சேர்ந்தவர்.

### தேசிய கிரிக்கெட் அகாடமியில் மருத்துவ குழு அமைக்க இந்தியாவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு

- தேசிய கிரிக்கெட் அகாடமியில் மருத்துவ குழு அமைக்க இந்தியாவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு
- தேசிய கிரிக்கெட் அகாடமியில் கிரிக்கெட் வீரர்களுக்கு மருத்து உதவி வழங்குவதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு செய்துள்ளது.
- இந்த குழு லண்டனை சேர்ந்த மருத்துவ முறை அடிப்படையில் அமைக்கப்பட உள்ளது.

# 1.7 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### *Pax Sinica: Implications for the India Dawn authored*

- *Pax Sinica: Implications for the India Dawn authored" என்ற புத்தகம் சமீர்சரண் மற்றும் அகில் தியோ என்பவர்கள் இணைந்து எழுதி உள்ளனர். இப்புத்தகத்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வெளியிட்டார்.*

### *"The Cuckoo's Nest"*

- *மலையாள நாவலாசிரியர் ஏ.சேதுமாதவனின் "The Cuckoo's Nest" என்ற முதல் புத்தகம் வெளியிடப்பட்டது. இந்த புத்தகம் நியோகி புக் பப்ளிகேஷனால் வெளியிட்டது.*

### கர்மயோதா கிரந்த்

- *பிரதமர் மோடியின் வாழ்க்கை குறித்த "கர்மயோதா கிரந்த்" என்ற புத்தகம், தில்லியில் வெளியிடப்பட்டது.*

### "பரம்பிகுளம்-அழியாறு பாசன திட்ட வரலாறு" நூல் வெளியீடு

- *'தமிழ் திசை" பதிப்பகம் சார்பில் "ஆசியாவின் பொறியியல் அதிசயம் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட வரலாறு" என்ற நூல் வெளியிடப்பட்டது.*
- *"இந்து தமிழ்" பொள்ளாச்சி செய்தியாளர் எஸ்.கோபு இந்நூலை எழுதி உள்ளார்.*

### பரம்பிகுளம்-ஆழியாறு பாசன திட்டம்

- *இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் ஆகிய தாலுக்காக்கள் பயனடைகின்றன. கேரள மாநிலத்தின் பாலக்காடு மற்றும் திருச்சூர் மாவட்டங்களும் பயனடைகின்றன.*

### *Embodiment of Truth – Kanchi Mahaswami'*

- *காஞ்சி காமகோடி பீடத்தை சேர்ந்த ஸ்ரீ சந்திரசேகரேந்திராவை பற்றிய இரண்டாவது புத்தகம் 'Embodiment of Truth – Kanchi Mahaswami' என்ற புத்தகம் இந்து தமிழ் சார்பாக வெளியிடப்பட்டது.*
- *ஜனவரி 8 அன்று ஸ்ரீ சந்திரசேகரேந்திரா சரஸ்வதி ஸ்வாமிகளின் 26வது சித்தி தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தின் முதல் பதிப்பு "Embodiment of Truth' என்ற பெயரில் ஸ்ரீ சந்திரசேகரேந்திரா பிறப்புகள் அடங்கிய புத்தகம் வெளியிடப்பட்டது.*

# 1.8 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### லோக்மான்ய திலக் பத்திரிக்கை விருது

- ஜாக்ரான் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் சஞ்சய் குப்தா பத்திரிகைத் துறையில் பெரும் பங்களிப்பு செய்ததற்காக "லோக்மான்ய திலக் தேசிய பத்திரிகை விருது" வழங்கப்பட்டு உள்ளது.
- இந்த விருதை கேசரி – மராத்தா அறக்கட்டளை நிறுவியது. 2020 ஜனவரி 4ம் தேதி 139வது அறக்கட்டளை விழாவின் போது வழங்கப்பட உள்ளது.

**"லோக்மான்ய திலக் தேசிய பத்திரிக்கை விருது"**

- பத்திரிகையாளர்கள் தைரியம் மற்றும் இலட்சியத்தினை ஊக்குவிக்க லோக்மாண்ய திலக் தொடங்கினார்.
- பரிசுத்தொகை ரூ.1 லட்சம் மற்றும் நினைவு பரிசுகள் வழங்கப்படுகின்றன

### *"Dhanu Jatra"* திருவிழா

- தனு ஜாத்ரா என்ற புகழ்பெற்ற 11 நாள் திறந்தவெளி நாடக திருவிழா மேற்கு ஒடிசாவில் பார்கரில் தொடங்கியது. ஜாத்ராவின் நாடகம் கிருஷ்ணர் மற்றும் கம்சாவின் கதையை அடிப்படையாகக் கொண்டது.
- கின்னஸ் பதிவுகளில் பெயரிடப்பட்ட உலகின் மிக நீண்ட திறந்தவெளி நாடகம் ஆகும். இந்த திருவிழா 1947-48 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது.
- இந்திய அரசு தனு ஜாத்ரா தேசிய விழாவாக கடந்த 2014ஆம் ஆண்டு நவம்பரில் வழங்கியது.

### டி.ஆர்.டி.ஓ. விஞ்ஞானி சித்ரா ராஜகோபாலுக்கு அறிவியலாளருக்கான விருது

- தெலங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் 34-வது இந்திய பொறியியல் மாநாடு அண்மையில் நடைபெற்றது.
- இந்நிகழ்ச்சியில் 2019-ம் ஆண்டுக்கான தேசிய வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் தேசிய வடிவமைப்பு விருதுகள் அறிவிக்கப்பட்டன.




- டி.ஆர்.டி.ஓ. நிறுவனத்தின் வளங்கள்-மேலாண்மை பொது இயக்குநர் சித்ரா ராஜகோபாலுக்கு பெண் அறிவியலாளருக்கான சுமன் சர்மா விருது,
- தஞ்சாவூரிலுள்ள இந்திய உணவு பதப்படுத்தல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர் அனந்தராமகிருஷ்ணனுக்கு சுற்றுச்சூழல் பொறியியலுக்கான வடிவமைப்பு விருது வழங்கப்பட்டது.

### தமிழகத்துக்கு சிறந்த வேளாண் தொழிலாளர் விருது

- எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் அதிக விளைச்சலை பெற்ற தமிழகத்துக்கு சிறந்த வேளாண் உற்பத்தியாளர் விருதை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார்.
- வேளாண் உற்பத்தியில் சிறந்து விளங்கும் விவசாயிகள், மாநில அரசுகளைக் கௌரவிப்பதற்காக, மத்திய வேளாண்மைத்துறை சார்பில் ஆண்டுதோறும் வேளாண் உற்பத்தியாளர் விருது (கிருஷிகர்மான்) வழங்கப்படுகிறது.
- வேளாண் விளைபொருள் விளைச்சலில் தமிழகத்துக்கு 5-ஆவது முறையாக இந்த விருது அளிக்கப்படுகிறது.

### உலகளாவிய குழந்தை பிராடி ஜி விருது 2020

- துபாய் சேர்ந்த இந்திய வம்சாவளி பெண் சுதோ சதீஷ் 120 மொழிகளில் பாடி உலகாளவிய குழந்தை பிராடி ஜி விருது 2020 பெற்றார்.



- நடனம், இசை, கலை, எழுத்து. நடிப்பு மாடலிங், அறிவியல், விளையாட்டு போன்ற துறைகளில் சிறந்து விளங்கும் குழந்தைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- இந்த விருதை டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் இன்டர்நேஷனல் பவுண்டேஷன் மற்றும் ஆஸ்கார் விருது பெற்ற இசை அமைப்பாளர் ஏ.ஆர் ரஹமான் ஆகியோர் இவ்விருதை ஆதரிக்கின்றன.

### மிஸ் டீன் ஏஜ் சர்வதேச அழகிப் போட்டி 2019



- ஆயுஷி தோலாகியா மிஸ் டீன் சர்வதேச 2019 விருது வென்றுள்ளார். மேலும் சிறந்த ஆடை விருது மற்றும் சிறந்த பேச்சு விருது ஆகிய பட்டங்களையும் பெற்றார்.
- மிஸ் டீன் இன்டர்னேஷனல் உலகின் பழமையான அழகிப் போட்டியாகும்.

### பிரதமரிடம் விருது பெற்ற நாமக்கல் பெண் விவசாயி



- நாமக்கல் மாவட்டம் பரமத்தி அருகே உள்ள கபிலக்குறிச்சி ஊராட்சிக்கு உட்பட்ட குஞ்சாம் பாளையத்தைச் சேர்ந்தவர் விவசாயி பி. பாப்பாத்தி. இவர் கடந்த 2017-18ம் ஆண்டு தனக்கு சொந்தமான 1 ஹெக்டேர் நிலத்தில் எள் சாகுபடி செய்த பாப்பாத்தி, ஹெக்டெருக்கு 1,210 கிலோ மகசூல் எடுத்துள்ளார்.
- கடந்த 2-ம் தேதி கர்நாடக மாநிலம் தும்கூரில் நடந்த விழாவில் பிரதமர் மோடி, விவசாயி பாப்பாத்திக்கு "கிரிஷி கர்மான்" எனும் "முன்னோடி விவசாயி விருது" மற்றும் ரூ.2 லட்சத்துக்கான காசோலையை வழங்கி பாராட்டு தெரிவித்துள்ளார்.

### தமிழகத்தைச் சேர்ந்த இரு ஊடகங்களுக்கு சர்வதேச யோகா தின விருது

- யோகா மூலம் ஆரோக்கியமான வாழ்க்கையை மேம்படுத்துதல் குறித்த பங்களிப்பைச் செய்த 30 ஊடகங்களுக்கு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் விருதுகளை வழங்கினார். இதில் தமிழகத்தைச் சேர்ந்த இரு ஊடகங்கள் விருதுகளைப் பெற்றன.
- இதில் சென்னை தூர்தர்ஷன், தந்தி குழுமத்தைச் சேர்ந்த ஹலோ எஃப்.எம். வானொலி ஆகியவையும் அடங்கும்.

**"அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் மீடியா சம்மன்"**

- ஊடக நிறுவனங்களுக்காக "அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் மீடியா சம்மன்" (Antarrashtriya Yoga Diwas Media Samman) என்ற ஒன்றை இந்திய அரசு அறிமுகம் செய்து உள்ளது.

### கோஸ்டா குழந்தைகள் விருதுகள் 2019

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஜஸ்பிந்தர் பிலனின் அறிமுக நாவலான ஆஷா "அண்ட் தி ஸ்பிரிட் பேர்ட்" – க்கு இங்கிலாந்தின் கோஸ்டா குழந்தைகள் விருதுகள் 2019 வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதுகள் 5 பிரிவுகளாக நாவல், சுயசரிதை, கவிதை ஆகிய பிரிவுகள் அடிப்படையில் வழங்கப்படுகிறது. பரிசுத் தொகையாக 5,000 பவுண்டஸ் வழங்கப்படுகிறது.

# 1.9 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### இந்தியா-பாகிஸ்தான் இடையே அணுமின் நிலையங்கள் பட்டியல் பரிமாற்றம்

- இந்தியா-பாகிஸ்தான் இடையே கடந்த 1988-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளிலும் உள்ள அணுமின் நிலையங்கள் குறித்த தகவல்கள் இருநாடுகளுக்கிடையே பரிமாறிக்கொள்ளப்பட்டன.
- இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் ஏற்பட்டால், போரின்போது இருநாடுகளிலும் உள்ள அணுமின் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடாது என்ற நிபந்தனையுடன் இருநாடுகளுக்கும் இடையே கடந்த 1988-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- இந்த ஒப்பந்தம் கடந்த 1991-ஆம் ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதி அமலுக்கு வந்தது.
- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 1-ஆம் தேதி இருநாடுகளிலும் உள்ள அணுமின் நிலையங்கள் குறித்த பட்டியல் பரிமாறிக்கொள்ளப்படுகிறது

### விசிட் நேபாள் 2020

- காத்மாண்டுவில் மிகப்பெரிய பொருளாதார முயற்சியான (Visit Nepal 2020) இந்திய சுற்றுலாத்துறை அமைச்சர் பிரஹலாத் படேல் தொடங்கி வைத்தார்.




- இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான சுற்றுலாவின் மூலம் நேபாளத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்பதால் இந்த (Visit Nepal 2020) மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

### கலைக்கண்காட்சி

- வங்காள நாட்டின் இந்திய உயர் ஆணையம் அண்டை நாடான வங்க தேச தலைநகரான டாக்காவில் “கலைகண்காட்சி“ நடத்த ஏற்பாடு செய்து உள்ளது. இக்கலைக்கண்காட்சி மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

# 1.10 நியமனங்கள்

### ஆசியான் மற்றும் கிழக்கு ஆசியான் பொருளாதார ஆராய்ச்சி குழுவின் தலைவர்

- உச்ச நீதிமன்றம் மற்றும் பல்வேறு உயர் நீதிமன்றங்களின் பயிற்சி பெற்ற ஆலோசகரான ரோஹான் ஷா, ஆசியான் மற்றும் கிழக்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் குழுவில் 3 வருட காலத்திற்கு இந்தியாவின் பிரதிநிதியாகவும் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**தொடக்கம் – 2008 ஜுன் 3**

- தலைமையகம் – இந்தோனேஷியா, ஜகார்த்தா

### தேசிய மருத்துவ ஆணைய தலைவராக சுரேஷ் சந்திரா நியமனம்

- தேசிய மருத்துவ கவுன்சிலுக்கு மாற்றாக கடந்த ஆண்டு ஆகஸ்டில் தேசிய மருத்துவ ஆணையம் உருவாக்கப்பட்டது.
- இந்த ஆணையத்தின் தலைவராக சுரேஷ் சந்திரா நியமனம் செய்யப்பட்டார்.
- அடுத்த 3 ஆண்டுகள் அல்லது 70 வயதை பூர்த்தி செய்யும் வரை அவர் பதவியில் நீடிப்பார்.

### ரயில்வேத்துறையின் தலைவராக வி.கே. யாதவ் பதவி ஒரு ஆண்டு நீட்டிப்பு



- மத்திய அமைச்சரவை, ரயில்வே துறையின் தலைவராக வி.கே. யாதவின் பதவியை மேலும் ஒரு ஆண்டிற்கு நீடிக்க ஒப்புதல் அளித்துள்ளது. ஜனவரி 1, 2019 அன்று அஸ்வானி லோகானியிலிருந்து ரயில்வே வாரியத் தலைவராக பொறுப்பேற்றார். இந்திய ரயில்வே சேவையில் 1980 ஆண்டு மின்சார பொறியாளராக பணியாற்றினார்.

### அயோத்தி விவகாரங்களை கண்காணிக்க சிறப்புக் குழுவை அமைத்தது மத்திய அரசு

- மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட உத்தரவில், அயோத்தி தீர்ப்பை அமல்படுத்துவது தொடர்பான விவகாரங்களை கூடுதல் செயலர் ஞானேஷ்குமார் தலைமையிலான மூவர்குழு கவனிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### லோக்பால் உறுப்பினர் ராஜினாமா

- லோக்பால் அமைப்பின் உறுப்பினர் பதவியை நீதிபதி திலீப் பி.போஸலே ராஜிநாமா செய்துள்ளார். லோக்பால் அமைப்பில் அதிகபட்சமாக 8 உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். அவர்களில், 4 பேர் நீதித்துறையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.
- லோக்பால் சட்ட விதிகளின்படி, லோக்பால் உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்யும் ஒருவர், எந்தத் தூதரகப் பதவியையும் ஏற்க முடியாது. மேலும், குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டப்பேரவை உறுப்பினர் ஆகிய பதவிகளுக்குப் போட்டியிட முடியாது.
- பிரதமர், மத்திய அமைச்சர்கள், உயரதிகாரிகள் மீதான ஊழல் புகார்களை விசாரிப்பதற்கு லோக்பால் சட்டத்தை மத்திய அரசு கடந்த 2013-ஆம் ஆண்டு இயற்றியது.

# 1.11 கலாச்சாரம்

### "Lai Haroba" திருவிழா



- லாய் ஹரோபா, மணிப்பூரின் மெய்டி பழங்குடியின சமூக மக்கள் கடைபிடிக்கும் சடங்கு திருவிழா அகர்தலாவில் கொண்டாடப்பட்டது. திரிபுரா மாநில அரசின் தகவல் மற்றும் கலாச்சார விவகாரங்கள் துறை அமைச்சகம் இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

### *Zo Kutpui Festival 2020*

- இந்தியா முழுவதும் பல இடங்களில் மிசோரம் அரசு இந்த விழாவை நடத்த உள்ளது. மிசோர மாநிலத்தில் உள்ள மிசோ சமூகத்தினர் *Zo Kutpui* திருவிழாவை கொண்டாட உள்ளனர்.
- இந்தியாவின் 10 மாநிலங்கள், அமெரிக்காவின் மேரிலாந்து, மியான்மரில் தஹான் மற்றும் பங்களாதேஷ் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

### வடகிழக்கு - குஜராத் கலாச்சார இணைவு

- ருக்மணியுடன் கிருஷ்ணரின் திருமணத்தை நினைவு கூரும் வகையில் வடகிழக்கு குஜராத் கலாச்சார இணைவு ஏற்படுத்த உள்ளதாக கலாச்சாரத்துறை அமைச்சர் டாக்டர். ஜிஜேந்திர சிங் தெரிவித்தார்.
- இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கும் குஜராத்தின் மாதவ்பூர் மேளாவில் வடக்கு கிழக்கு பிராந்தியத்தின் எட்டு மாநிலங்கள் பங்குபெற உள்ளன.




## 2.1 சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புகள்

**தலீத் கிறிஸ்தவர்களுக்கு இட ஒதுக்கீடு**

- பட்டியல் இனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு சலுகைகளை தலித் கிறிஸ்தவர்கள் அல்லது பட்டியல் இனத்தை சேர்ந்த கிறிஸ்தவர்கள் இந்த இட ஒதுக்கீடு சலுகைகளை அனுபவிக்கலாம் என்று உச்சநீதிமன்றம் ஒப்புக்கொண்டுள்ளது.
- தலித் கிறிஸ்தவர்களின் தேசிய கவுன்சில் தாக்கல் செய்த முறையீட்டில் அரசு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைகளில் இடஒதுக்கீட்டில் மதச்சார்பற்ற நடுநிலை (Religion Neutral) அரசாக இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தது.

## 2.2 மத்திய அரசாங்கம் - பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

**கிசான் சம்மான் நிதி**

- பிரதமர் நரேந்திர மோடி பிரதான் மந்திரி கிசான் யோஜனாவின் நான்காவது பகுதியை கர்நாடகாவின் மைசூரில் வெளியிட உள்ளார்.
- மேலும் இயற்கை முறையிலான விவசாயம் செய்யும் 28 விவசாயிகளுக்கு விருதுகளை பிரதமர் நரேந்திர மோடி "கிரிஷ் கர்மண்" விருதுகளும் வழங்கப்பட்டன.

**பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி**

- பட்ஜெட் 2019 தாக்கல் செய்துள்ள மத்திய அரசு பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி (PM-KISAN) திட்டம் கீழ் நலிந்த விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 6,000 ரூபாய் நிதி உதவி செய்யும் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

**பயிர் காப்பீட்டு திட்டத்தை மறு ஆய்வு செய்ய குழு**

- பயிர் காப்பீட்டு திட்டத்தை மறு ஆய்வு செய்ய ராஜ்நாத் சிங் தலைமையிலான 7 உறுப்பினர்கள் கொண்ட குழு ஆய்வு செய்ய உள்ளன.
- இதில் உள்துறை அமைச்சர் அமித்ஷா வேளாண்மை துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், வேளாண்மை, நிதி, பழங்குடி, விவகாரங்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு அமைச்சர் ஆகியோர் இதில் அடங்குவர்.

**பிரதான் மந்திரி பசல் பீமா யோஜனா**

- தொடக்கம் – 14 ஜனவரி 2016
- நோக்கம் – விவசாயிகளுக்கு நிதி ஆதரவு அளித்தல்
- இணையாத மாநிலங்கள் – பீகார், மேற்கு வங்காளம், ஆந்திரபிரதேசம்
- 1.5% ராபி பயிர், 2% காரிப்பயிர், 15% தோட்டக்கலை பயிருக்கு காப்பீடு வழங்குகிறது.

**கிராம தத்தெடுப்புத் திட்டம்**

- கடந்த 2014-ம் ஆண்டு அக்டோபர் மாதம் "சன்ஸத் ஆதர்ஷ் கிராம யோஜனா" (முன்மாதிரி கிராம தத்தெடுக்கும் திட்டம்) என்ற திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி

தொடங்கி வைத்தார்.

- இதை ஊரக வளர்ச்சித் துறை அமல்படுத்துகிறது. இதன்படி நாடாளுமன்ற எம்.பிக்கள் ஆண்டுக்கு தலா ஒரு கிராமத்தை தத்தெடுத்து, அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கி, முன்மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டும்.

**மோடி தத்தெடுத்த கிராமங்கள்**

- பிரதமர் மோடி தனது வாரணாசி தொகுதியில் ஜெய்பூர், நாகேபூர், ககரியா மற்றும் டொமரி ஆகிய 4 கிராமங்களை தத்தெடுத்திருந்தார்.

### அந்தராஷ்டிரிய யோகா திவாஸ் மீடியா சம்மன்

- ஊடக நிறுவனங்களுகாக "அந்த ராஷ்டிரிய யோகா திவாஸ் மீடியா சம்மன்" (Antarrashtriya Yoga Diwas Media Samman) என்ற ஒன்றை இந்திய அரசு அறிமுகம் செய்து உள்ளது.
- இந்த விருது ஜனவரி 7, 2020 அன்று 30 ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட உள்ளது.
- தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகம் இந்த விருது வழங்கபட உள்ளது இந்த விருதின் முக்கிய நோக்கம் உலகெங்கும் யோகாவை மேம்படுத்துவதில் ஊடகங்கள் மேற்கொள்ளும் பங்கை ஊக்குவிக்க இந்த விருது வழங்கப்பட உள்ளது.

### மத்திய அரசின் உஜாலா திட்டம்

- 2015ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்த மத்திய அரசின் மானியம் இல்லாத உஜாலா மற்றும் தேசிய தெருவிளக்குத் திட்டம் ஐந்தாண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- உஜாலா என்பது வீடுகளுக்கு ஒளி தரும் உலகிலேயே மிகப்பெரிய திட்டமாகும். அதேபோல். தெருவிளக்குகளை LED பல்புகளாக மாற்றி அமைப்பது மற்றொரு நோக்கமாகும்.



LED Bulbs Under "UJALA" Scheme

- இந்த இரண்டு திட்டங்களையும் மத்திய மின்சார அமைச்சகத்தின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களுடன் இணைந்து இஇஎஸ்எஸ் (Electrical Equipment Safety Scheme) நிறுவனம் அமல்படுத்துகிறது.
- தேசிய தெருவிளக்குகள் திட்டத்தின் கீழ், 2020 மார்ச் மாதத்திற்குள் 1.34 கோடி வழக்கமான தெருவிளக்குகளை மாற்றி எல்இடி விளக்குகளைப் பொருத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் தெற்காசிய கொள்முதல் கண்டுபிடிப்பு விருது (South Asia procurement Innovation) பெற்றது.

### தென்னிந்தியாவின் தூய்மையான நகரமாக தஞ்சை மாவட்டம் மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சித் தேர்வு

- தென்னிந்தியாவிலேயே தூய்மையான நகரங்களின் பட்டியலில் தஞ்சாவூர் மாவட்டம் மேலத்திருப்பூந்துருத்தி பேரூராட்சி முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- அகில இந்திய அளவில் தூய்மையான நகரங்களில் முதல் 150 நகரங்கள் பட்டியலில் தமிழகத்தில் இருந்து இடம்பெறும் ஒரே நகரம் என்ற பெருமையை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 2.3 அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள்

**அமலுக்கு வந்தது குடியுரிமை திருத்தச் சட்டம்**




- *குடியுரிமை திருத்தச் சட்டம் (ஜனவரி 10) முதல் அமலுக்கு வந்துவிட்டதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக முறைப்படியாக அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. 'குடியுரிமை திருத்தச் சட்டத்தின்கீழ் பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தானில் இருந்து வந்துள்ள முஸ்லிம் அல்லாத பிற மதத்தினர் இந்தியக் குடியுரிமை பெறலாம்.*
- *பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மத ரீதியிலான துன்புறுத்தலுக்கு ஆளாகி, கடந்த 2014, டிசம்பர் 31-ஆம் தேதிக்கு முன் இந்தியாவில் குடியேறிய அந்நாடுகளைச் சேர்ந்த சிறுபான்மையினரான ஹிந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சி இனத்தவர், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு இந்திய குடியுரிமை அளிப்பதே இந்த திருத்தச் சட்டத்தின் நோக்கமாகும்.*

# 3. புவியியல்




## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### தூய்மையான நகரம் இந்தூர்



- நாட்டில் தூய்மையான நகரங்களின் பட்டியலில் தொடர்ந்து 4-வது முறையாக மத்தியப் பிரதேச மாநிலம், இந்தூர் நகரத்தை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.
- முதல் காலாண்டில் அதாவது ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் மத்தியப் பிரதேசத் தலைநகர் போபால் இரண்டாவது இடத்தையும், இரண்டாவது காலாண்டிலெ (ஜுலை-செப்டம்பர்) குஜராத் மாநிலம், ராஜ்கோட் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன.

### பவளப் பாறைகளை பாதுகாக்க சன்கிரீன் தடை செய்த முதல் நாடு



- பசிபிக் தீவுகளில் உள்ள பாலவ் நாடு பவளப்பாறைகளை பாதுகாக்க சன்கிரீன்கள் தடை செய்த முதல் நாடு ஆகும். ஆக்ஸிபென்சோன் உள்ளிட்ட அழகு சாதனப் பொருட்களில் பயன்படுத்தப்படும் பொதுவான பொருட்களை பலாவ் நாடு தடை செய்துள்ளது.
- கடந்த 2018 ஆம் ஆண்டு இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. ஆனால் ஜனவரி 1, 2020 ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- பலாவில் உள்ள ராக் தீவுகள் யுனெஸ்கோவின் உலகபாரம்பரியதளமாகும். பவளப்பாறைக்கு தீங்கு விளைவிக்கும் 10 பொருட்களுக்கு பலாவு நாடு தடை விதித்துள்ளது.

### கடந்த மூன்று ஆண்டுகளில் 100க்கு குறைவான புலிகள் இறந்ததை இந்தியா பதிவு செய்துள்ளது

- கடந்த மூன்று ஆண்டுகளில் முதன்முறையாக நாட்டில் புலி இறப்பு எண்ணிக்கை 100க்கும் குறைவாகவே உள்ளது. வன சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் தரவுகளின்படி நாட்டில் புலி இறப்பு சம்பவங்கள் 84 ஆகவும் மற்றும் இறப்பு 11 ஆகவும் இருந்ததாக தெரிவித்துள்ளது. இரண்டும் சேர்த்து பார்க்கையில் 2019 ஆம் ஆண்டில் 95 ஆக இருப்பதாக தெரிவிக்கப்பட்டள்ளது.

| மாநிலங்கள் | இறந்த புலிகள் எண்ணிக்கை |
|---|---|
| மகாராஷ்டிரா | 18 |
| கர்நாடகா | 12 |
| உத்தரகாண்ட் | 10 |
| தமிழ்நாடு | 7 |

### ஒடிசாவின் பிதர்கானிகா தேசிய பூங்கா கணக்கெடுப்பு

- பிதர்கானிகா தேசிய பூங்காவில் சமீபத்தில் மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி உப்பு நீர் முதலைகளின் எண்ணிக்கை 1,757 ஆக அதிகரித்துள்ளது.

**பிதர்கானிகா தேசிய பூங்கா**

- இது இந்தியாவின் இரண்டாவது பெரிய சதுப்பு நில சுற்றுச்சூழல் (Mangraove Ecosystem) ஆகும்.
- இந்த பூங்கா 2002 ஆம் ஆண்டில் ராம்சார் ஈரநில பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இது சிலிக்கா ஏரிக்குப் பிறகு இந்த அந்தஸ்தைப் பெற்ற இரண்டாவது பகுதி இதுவாகும்.

### மிக வெப்பமான 2019ம் ஆண்டு இருந்தது : இந்திய வானிலை மையம்

- 2019ம் ஆண்டு இயல்பை விட அதிகம் வெப்பமான ஆண்டாக இருந்ததாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.
- இந்தியாவில் கடந்த 1901ம் ஆண்டிற்கு பிறகு 7வது மிக அதிகம் வெப்பம் நிறைந்த ஆண்டாக 2019ம் ஆண்டு இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2019ம் ஆண்டில் இயல்பை விட 0.36 டிகிரி செல்ஷியஸ் வெப்பம் அதிகமாக இருந்ததாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- மொத்தம் உள்ள 15 வெப்பமான ஆண்டுகளில் பட்டியலில்11 ஆண்டுகள் 2005-2019ல் அடங்கும்.

### பறவைக் காய்ச்சல் : 15000க்கும் அதிகமான கோழிகள் அழிப்பு

- ஹெச்5என்1 வைரஸ் பாதிப்புக்குள்ளாகும் கோழிகள் மூலம் மனிதர்களுக்கு இந்த வைரஸ் பரவுவது பறவைக் காய்ச்சல் என அழைக்கப்படுகிறது.
- போபால் நகரில் உள்ள ஆய்வகத்தில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. ஹெச்5என்1 வைரஸால் கோழிகள் பாதிப்புக்குள்ளானது குறித்து தெரியவந்தது.

### காசிரங்கா தேசிய பூங்காவில் அதிக எண்ணிக்கையிலான ஈர நில பறவைகள்

- ஈர நிலங்களில் வாழக்கூடிய பறவை யினங்களில் இந்த ஆண்டின் அதிக எண்ணிக்யைகிலான பதிவுகளை காசிரங்கா உயிரியியல் பூங்கா கொண்டுள்ளது.
- 19225 பறவைகளில் எடுக்கப்பட்ட இந்த கணக்கெடுப்புகளில் 96 வகையான புதிய பறவைகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.
- ஈர நிலங்களில் வாழும் பறவையினங்கள் குளிர்காலத்தில் மிதவெப்ப பகுதிகளை நோக்கி இனப்பெருக்கத்திற்காக வருகின்றன. இவ்வாறு வருகின்ற பறவைகளில் அதிக அளவில் காசிரங்கா உயிரியியல் பூங்காவில் பதிவுகள் பெற்றுள்ளது.

**காசிரங்கா உயிரியியல் பூங்கா**

- 115 ஆண்டுகள் பழமைவாய்ந்த காசிரங்கா உயிரியியல் பூங்கா அசாமில் அமைந்துள்ளது. யுனெஸ்கோவின் பாரம்பரிய பட்டியலில் இடம்பெற்றுள்ளது.




# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### அடுத்த 5 ஆண்டுகளில் ரூ. 102 லட்சம் கோடி செலவில் உள்கட்டமைப்பு திட்டங்கள்

- அடுத்த 5 ஆண்டுகளில் உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக ரூ.102 லட்சம் கோடி செலவிடப்படவுள்ளதாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.
- உள்கட்டமைப்பு திட்டங்களில் மத்திய அரசு மேற்கொள்ளவுள்ள இந்த முதலீடு, வரும் 2025-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 5 லட்சம் கோடி டாலராக்கும் இலக்குக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்றார்.

### முதலீடுகளை ஒருங்கிணைக்க *“NEST”* உருவாக்கம்

- முதலீடுகளை ஒருங்கிணைக்க “NEST - New and Emerging Strategic Technology” என்ற புதிய பிரிவை வெளியுறவு அமைச்சம் உருவாக்கி உள்ளது.
- நாட்டில் மாநிலங்களுக்கிடையேயும், வெளிநாடுகளில் இருந்து முதலீட்டை ஒருங்கிணைக்கவும் இந்த பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

### தேசிய பங்குச்சந்தை அறிவு மையம் தொடக்கம்

*(National Stock Exchange knowledge Hub)*

- செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல் தொடர்பான அறிவுசார் மையம் புதுடெல்லியில் தொடங்கி வைக்கப்பட்டது.
- நிதிசார் துறைகள் பற்றிய விழிப்புணர்வையும் அறிவையும் இளம் தலைமுறையினருக்கு வழங்கும் பொருட்டு தேசியப் பங்குச் சந்தை நிறுவனம் இந்த மையத்தை நிறுவியுள்ளது.
- இந்த மையம் முழுக்க முழுக்க செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல் தொழில்நுட்பத்தின் மூலமாகச் செயல்படுத்தப்பட உள்ளது.

### பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக குறையும்

- நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக குறையும் என மத்திய புள்ளியியல் ஆய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.
- கடந்த 2018-19 நிதியாண்டில் 6.9 சதவீதமாக காணப்பட்ட தயாரிப்பு துறையின் வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 2 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சமீபத்திய உலக வங்கி அறிக்கை** : நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக சரியும் என உலக வங்கி கணித்துள்ளது.

### ரிசர்வ் வங்கி காணொலி அடிப்படையில் நுகர்வோர் அடையாளம்

- வாடிக்கையாளர் உள்நுழைவுக்கான அடையாளத்தை உறுதிபடுத்துவதற்காக காணொலி அடிப்படையில் நுகர்வோர் அடையாளம் செயல்முறை (V-CIP – Video – Customer Identification Process) ரிசர்வ் வங்கி அறிமுகம் செய்துள்ளது.

- காணொலி அடிப்படையிலான வாடிக்கையாளர் அங்கீகாரத்திற்கு பான் மற்றும் ஆதார் எண் கட்டாயமாக்கி உள்ளது.

**இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக சரியும்**

- நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக சரியும் என உலக வங்கி கணித்துள்ளது.
- வங்கி சாரா நிதி நிறுவனங்களின் கடன் வழங்கும் நடவடிக்கைகளில் காணப்படும் மந்த நிலை நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- எதிர்பார்த்ததைவிட குறையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் உலக வங்கி தெரிவித்துள்ளது.

**நிதி உள்ளடங்களுக்கான புதிய வரைமுறைகள்**

- 2019 முதல் 2024ம் ஆண்டிற்குள்ளான நிதி உள்ளடங்களுக்கான வரையறைகளை ரிசர்வ் வங்கி வரையறுத்துள்ளது.
- தேசிய நிதி உள்ளடங்களுக்கான உத்தி (NSFI) 2019-2024 வரையிலான கால கட்டத்திற்கான பொருளாதார வளர்ச்சிக்கும், மக்கள் மற்றும் சமூகத்திற்கான அனைத்து தரப்பையும் உள்ளடங்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் பல தரப்பட்ட முயற்சிகளை செயல்படுத்துவதற்காக. இந்த அமைப்பு செயல்திட்டங்களை வகுத்துள்ளது.
- நிதித்துறை நிலையான வளர்ச்சி குழு இந்த செயல் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து உள்ளது.

**நிதித்துறை நிலையான வளர்ச்சி குழு**

- ரகுராம் ராஜன் கமிட்டி அளித்த பரிந்துரையின் பேரில் 2008ம் ஆண்டில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- நிதி அமைச்சர் இந்த குழுவிற்கு தலைமை தாங்குவார்.

**ரிசர்வ் வங்கி**

- தலைமையிடம் – மும்பை, மகாராஷ்டிரா
- உருவாக்கம் – ஏப்ரல் 1, 1935

# 5. அறிவியல்





## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

### நீரிலிருந்து ஆற்றலை உற்பத்தி செய்யும் பொருள் கண்டுபிடிப்பு

- குவாஹாத்தியின் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நீரிலிருந்து ஆற்றலை உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை உருவாக்கி உள்ளன.
- இக்கண்டுபிடிப்புகள் சமீபத்தில் ஏசிஎஸ் அப்ளைடு நானோ பொருட்களில் வெளியிடப்பட்டன.
- *"Electrokinetic streaming potential"* பயன்படுத்தி நீரிலிருந்து ஆற்றலை உற்பத்தி செய்யும் முறையை கண்டறிந்துள்ளன. தேங்கி கிடக்கும் நீரிலிருந்து உற்பத்தி செய்ய பல்வேறு வகையான குறை கடத்தி பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

### தூத்துக்குடியில் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம்



- தூத்துக்குடியில் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம் அமைக்க திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் கே.சிவன் தெரிவித்தார்.
- ஸ்ரீஹரிகோட்டாவுக்கு அடுத்தப்படியாக தூத்துக்குடியில் ஏவுதளம் அமைக்கப்படுகிறது.

### பார்வைத்திறன் குறைபாடு உடையவர்களுக்காக ரூபாய் நோட்டுகளை கண்டறியும் செயலி அறிமுகம்



- பார்வைத் திறன் குறைபாடு உடையவர்கள் இந்திய ரூபாய் நோட்டுகளைக் கண்டறிய வசதியாக செயலி ஒன்றை ரிசர்வ் வங்கி அறிமுகம் செய்துள்ளது. மணி( *Mobile Aided Note Identifier*) (மொபைல் எய்டட் நோட் ஐடென்டிபயர்) என்ற பெயரிலான இந்த செயலியை ஆர்பிஐ கவர்னர் சக்தி காந்ததாஸ் அறிமுகம் செய்தார். ஸ்மார்ட்போனில் இந்த செயலியை பதிவிறக்கம் செய்தபிறகு இதற்கு வை-பை இணையதள இணைப்பு தேவையில்லை.

### இஸ்ரோ தனது நான்காவது பிராந்திய விண்வெளி மையம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் கர்நாடகாவில் உள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் நான்காவது பிராந்திய விண்வெளி மையம் (Regional Academic Centre for space) அமைக்க உள்ளது. எதிர்கால தொழில்நுட்பம் மற்றும் தற்போது தேவைகளுக்கு பொருந்துமாறு மேம்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ள இந்த மையம் உதவும்.

**இஸ்ரோ**

- தலைவர் – கே.சிவன்
- தலைமையிடம் – பெங்களூரு
- இஸ்ரோ இயக்குநர் – டாக்டர் வி.டி.வெங்கட கிருஷ்ணன்

**ஒளியியல் தொலைநோக்கி**

- "நேத்ரா" திட்டத்தின் கீழ் ஒளியியல் தொலைநோக்கியை நிறுவ (Optical Telescope) இந்திய வானியற்பியல் நிறுவனத்துடன் இஸ்ரோஒப்பந்தத்தில்கையெழுத்திட்டுள்ளது.
- ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்காக கர்நாடகத்தில் உள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து செயல்பட உள்ளது.

**நேத்ரா திட்டம்**

- 'நேத்ரா' என்ற திட்டத்தை இஸ்ரோ கடந்த ஆண்டு செப்டம்பரில் (2019) தொடங்கியது. இந்த திட்டத்தின் மூலம் செயற்கைக்கோள் மற்றும் பூமிக்கு விண்ணில் இருந்து வரக்கூடிய ஆபத்துக்களை முன்கூட்டியே கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள முடியும்

**பேம் இந்தியா *II* - தமிழகத்தில் 256 மின்னேற்று நிலையங்கள்**

- தமிழகத்தில் பேட்டரி வாகனங்களுக்கான 256 மின்னேற்ற நிலையங்கள் உள்பட நாடு தழுவிய அளவில் 2,636 மின்னேற்று (சார்ஜிங்) நிலையங்கள் தொடங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக மத்திய கனரக தொழில்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கான அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர் தெரிவித்தார்.
- இருபத்து நான்கு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்துக்குள்பட்ட 62 நகரங்களில், 2,636 புதிய மின்னேற்று நிலையங்களை அமைப்பதற்கான அனுமதியை மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**பேம் இந்தியா-*II***

- மின்சார வாகனப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலான பேம் 2 திட்டம் நெடுஞ்சாலைகளில் 25 கிலோ மீட்டருக்கு ஒரு மையம் அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்துக்காக ஏற்கெனவே முதற்கட்டமாக ஏப்ரல் 1, 2015-ல் 895 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்ட நிலையில், தற்போது ஏப்ரல் 1, 2019ஆம் ஆண்டு10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**இஸ்ரோவின் விண்வெளி வீரர்களுக்கான பயிற்சி மையம்**

- விண்வெளி வீரர்களுக்கான பயிற்சி மையத்தை பெங்களூரில் உள்ள சல்லகேரா என்ற இடத்தில் உலகத்தரத்தில் அமைக்கப்பட உள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. இந்த பயிற்சி மையம் பெங்களூர் – பூனே தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சல்லகேரா என்ற மாவட்டத்தில் அடுத்த மூன்று ஆண்டுகளில் அமைக்கப்பட உள்ளது.
- இஸ்ரோ இதற்காக ரூ.2700 கோடி ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரியுள்ளது. இதற்கான மாதிரி கட்டிடத்தை (Young human Space Flight Center) உருவாக்க உள்ளது.

**நிமோனியாவுக்கான புதிய மருந்துக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல்**

- கடந்த 2019ஆம் ஆண்டு யுனிசெஃப் அறிக்கையின்படி நிமோனியாவால் பாதிக்கப்பட்டு 1,27,000 பேர் கடந்த 2018ல் இறந்து உள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது. இதற்காக செர்ரும் நிறுவனம் கண்டறிந்த புதிய நிமோனியா தடுப்பூசிக்கு (PNEUMOSIL) உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளித்த உள்ளது.

**ஏசி வெப்பநிலையை 24 டிகிரி செல்சியஸாக நிர்ணயிக்க மத்திய அரசு உத்தரவு**

- மத்திய எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எரிசக்தி சிக்கன அமைப்புடன் (பிஇஇ) (Bureau of Energy efficiency) மத்திய அரசு கலந்தாலோசித்து, அறை ஏசி சாதனங்கள் தொடர்பான புதிய விதிமுறைக்கான அறிக்கையை கடந்த அக்டோபர் 30-ந் தேதி வெளியிட்டது.
- இதன்படி இந்தியாவில் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யப்படும், ஒன்று முதல் 5 ஸ்டார் வரை லேபிள் கொண்ட அனைத்து பிராண்ட் ஏசி சாதனங்களிலும் 2020 ஜனவரி 1 முதல் இயல்புநிலை வெப்பநிலை

(default temperature) 24 டிகிரி செல்சியஸ் ஆக நிர்ணயிக்கப்பட வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

### ககன்யான் குழுவிற்கு உதவ இஸ்ரோவின் புதிய செயற்கைக்கோள்

- இந்திய தரவு ரிலே செயற்கைக்கோள் அமைப்பு (Indian Data Relay Satellite System) பூமியின் சுற்றுப்பாதையில் கண்காணிக்கும்.
- இந்த ஐ.டி.ஆர்.எஸ்.எஸ் இந்தியாவின் ககன்யான் திட்டத்தில் மிக முக்கிய பங்கு வகிக்க உள்ளது.
- இந்த ஐ.டி.ஆர்.எஸ்.எஸ் (IDRSS) செயற்கைக்கோள்கள் ஜி.எஸ். எல்.வி. லாஞ்சரில் செலுத்தப்பட உள்ளது.
- அவை தோராயமாக 2000 கிலோ எடையை கொண்டது. இந்த செயற்கைக்கோள் பூமியில் இருந்து 36,000 கி.மீ. தூரத்தில் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

**ஐ.ஆர்.டி.எஸ்.எஸ்**

- ஆண்டு இறுதிக்குள் இரண்டு செயற்கைக்கோள் செலுத்தப்பட உள்ளது. மனித மாதிரிகளை சோதனை முன்னோட்டமாக கொண்டு செல்ல உள்ளது. இதன் முதல் செயற்கைக்கோள் 2020 ஆண்டு இறுதியிலும், மற்றொன்று 2021 ஆண்டு அனுப்பட உள்ளது.

### 100 ஒளி ஆண்டு தொலைவில் பூமி அளவுக்கு பெரிய கிரகம் நாசா செயற்கைக்கோள் கண்டுபிடிப்பு

- நூறு ஒளி ஆண்டு தொலைவில் பூமி அளவுக்கு பெரிய கிரகம் பிரபஞ்சத்தில் இருப்பதை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா செயற்கைக்கோள் கண்டு பிடித்துள்ளது.
- நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அனுப்பியுள்ள டெஸ் (Tess) என்ற செயற்கைக் கோளானது பிரபஞ்சத்தில் காணப்படும் புதிய கிரகங்கள், நிலவுகளை கண்டுபிடித்து ஆய்வு நடத்தி வருகிறது.
- இந்நிலையில் பூமியிலிருந்து 100 ஒளி ஆண்டு தொலைவில் (ஒரு ஒளி ஆண்டு என்பது ஒளியானது ஓராண்டில் பயணப்படும் தூரமாகும்) பூமி ஆளவுக்கு பெரிய கிரகத்தைக் கண்டறிந்துள்ளது.
- இதற்கு டிஓஐ 700 டி (TOI 700 d) என்று பெயரிடப்பட்டுள்ளது.

### விக்ரம் சாராபாய் குழந்தைகள் கண்டுபிடிப்பு மையம்

- குஜராத் மாநில முதலமைச்சர் விஜய் ரூபானி விக்ரம் சாராபாய் குழந்தைகள் கண்டுபிடிப்பு மையம் அமைப்பதாக அறிவித்துள்ளார்.
- இதன்மூலம் குழந்தைகளின்கண்டுபிடிப்புகள் ஊக்குவிக்கப்படும் என குழந்தைகள் கண்டுபிடிப்பு மையம் பற்றி தெரிவித்தார்.
- இந்த மையம் யுனிசெப் உடன் இணைந்து குஜராத் பல்கலைக்கழகம் தொடக்க மற்றும் தொழில் முனைவோர் கவுன்சில் ஏற்பாடு செய்துள்ளது.

### நிலவு, செவ்வாய் கிரகத்துக்கு செல்லும் இந்தியர்

- அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா 2017-ல் விண்வெளிக்கு வீரர்களை அனுப்புவதற்காக கடந்த 2 வருடமாக பயிற்சி அளித்து வந்தது. அந்த பயிற்சியில் மொத்தம் 11 பேர் வெற்றிகரமாக பயிற்சியை முடித்துள்ளனர்.
- இந்த 11 பேரில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 41 வயதான ராஜா ஜான் உர்புத்தூர் சாரியும் ஒருவர்.
- அமெரிக்காவில் பிறந்த ராஜா ஜான் உர்புத்தூர் சாரி, அமெரிக்க விமானப் படையில் கர்னலாக பணிபுரிந்து வந்தார்.
- வரும் 2024-ல் நிலவுக்கு முதல்முறையாக பெண்ணை அனுப்ப நாசா முடிவு செய்துள்ளது. அதன் பிறகு 2030 வரை ஒவ்வொரு ஆண்டிலும் நாசா சார்பில் நிலவுப் பயணம் இருக்கும்.

### அறை வெப்பநிலைக்கு ஏற்ற சோடியம் சல்பர் மின்கலன்

- சென்னை IIT யை சேர்ந்த விஞ்ஞானிகள் அறை வெப்பநிலைக்கு ஏற்றவாறு இயங்கக்கூடிய புதிய வகை சோடியம் சல்பர் பேட்டரியை வடிவமைத்துள்ளனர்.
- அறை வெப்பநிலைக்கு ஏற்றவாறு செயல்படும் பேட்டரிகளிலிருந்து அதிகப்படியான அளவில் திறனை பெற முடிகிறது என்ற விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். எனவே சோடியம் சல்பர் கலவை வெப்பநிலைக்கு ஏற்ப உடனடி தகவமைவு கொண்டுள்ளதால் இந்த வகை பேட்டரிகள் அதிக வெளியீடு திறனை கொண்டதாக உள்ளது.

# 5.2 ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு

### திருடப்பட்ட மொபைல்களை கண்டுபிடிப்பதற்கான வலைத்தளம்

- டெல்லியில் திருடப்பட்ட மொபைல்களைக் கண்டுபிடிப்பதற்காக, தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் திரு.ரவிசங்கர் பிரசாத் www.ceir.gov.in என்ற வலைதளத்தைத் தொடங்கினார்.
- 2019 செப்டம்பரில் மும்பையில் தொடங்கப்பட்டது, டெல்லியில் தற்போது தொடங்கி வைக்கப்பட்டது.
- இது அடுத்து மற்ற மாநிலங்களுக்கும் விரிவுப்படுத்த உள்ளது.
- திருடப்பட்ட சாதனத்தின் IMEI (சர்வதேச மொபைல் கருவி அடையாளம்) எண்ணைத் தடுக்க FIR நகலுடன் தங்கள் கோரிக்கையை https://ceir.gov.in/ போர்ட்டலில் பதிவு செய்யலாம்.

### *ePAUTI* செயலி

- ஒடிசாவின் முதலமைச்சர் இ-சான்றிதழ் போர்டல் மற்றும் இ-பாவுடி என்ற செயலியை அறிமுகம் செய்துள்ளார்.
- இந்த மின் சான்றிதழ் திட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் 5T மாதிரியின் ஒரு பகுதியாகும். இந்த சேவைக்களுக்காக சான்றிதழ்களுக்கு கட்டணம் வசூலிக்கப்படாது. இதன் மூலம் சாதி சான்றிதழ், குடியிருப்பு சான்றிதழ் பெற விண்ணப்பிக்கலாம்.

### *ePAUTI* செயலி

- இந்த செயலியின் மூலம் அரசாங்க அலுவலகத்திற்கு செல்லாமல் ஸ்மார்ட் போன்களின் உதவியுடன் ஆன்லைனில் நில வருவாயை செலுத்தலாம்

### மையப்படுத்தப்பட்ட அணுகல் கட்டுப்பாட்டு முறை தொடக்கம் *(Centralised Access Control System)*

- சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் பயோமெட்ரிக் மூலம் இயக்கப்பட்ட மையப்படுததப்பட்ட அணுகல் கட்டுப்பாட்டு முறையைத் தொடங்கி வைத்தார். மேலும் e-BCAS Project Trainig Module-லை தொடங்கி வைத்தார்.
- இந்த இரண்டு திட்டங்களும் விமான நிலையங்களில் பாதுகாப்பை மேம்படுத்து வதையும் வணிகத்தை எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

### பெண்களைக் காக்கும் 'காவலன்' செயலி




- அவசர நேரங்களில் பெண்கள் மற்றும் முதியவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவியாகத் தமிழகக் காவல்துறை ``காவலன் SOS' என்ற செயலியை

இந்த வருடம் அறிமுகம் செய்தது.

- இந்த செயலியை பதிவிறக்கம் செய்வதன் மூலம் ஆபத்திலிருக்கும் நபருக்கு அடுத்த சில நிமிடங்களிலேயே சம்பந்தப்பட்டவர்களுக்குக் காவல்துறையின் பாதுகாப்பு கிடைத்துவிடும்

### இந்தியாவின் முதல் *e-Gazatte* போர்டல்

- ஒடிசா மாநில அரசு e-Gazatte என்ற இணையத்தளத்தை அறிமுகம் செய்துள்ளது. இது இந்தியாவின் முதன்முதலில் தேசிய தகவல் மையத்தால் வடிவமைக்கப்பட்ட அனைத்து துறைகளுக்கும் பொருந்த கூடிய முதல் அமைப்பு.
- ஒடிசா மாநில அரசின் 5T (Transparency, Teamwork, Technology, Time and Transformation) முயற்சியின் ஒரு பகுதியாக தொடங்கி வைக்கப்பட்டது.


### வஜ்ரா தளம்

- இணையத்தள பரிவர்த்தனைகள் விரைவாகவும், பாதுகாப்பாகவும் செய்ய இந்திய தேசிய பரிவர்த்தணை கழகம் (National Payment Corporation of India) வஜ்ரா பரிவர்த்தனை (Vajra Platform) என்ற தளத்தை அறிமுகம் செய்துள்ளது.
- இது பிளாக்செயின் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பரிவர்த்தனையில் ஏதேனும் குறைபாடுகள் நிகழ்ந்தால் தானியங்கி முறையில் சரி செய்து கொள்ளும் ஆதார் அங்கீகாரத்திற்காகவும் இந்தியாவின் தனித்துவமான அடையாள ஆணையம் (UIDAI) வஜ்ரா தளத்தையும் பயன்படுத்துகிறது

### சைபர் குற்ற ஒருங்கிணைந்த மையம்

- மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இந்திய சைபர் குற்ற ஒருங்கிணைப்பு மையத்தை திறந்து வைத்தார் (14C). 14C என்பது ஏழு அமைப்புகள் இதில் அடங்கும்.
- இதில் சைபர் கிரைம் ரிப்போர்டிங், போர்டல், திறன்மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு போன்ற பல அமைப்புகள் இதில் அடங்கும்.
- 15 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பிராந்திய சைபர் குற்ற ஒத்துழைப்பு மையம் (Regional Cyber Crime Coordination Centres) அமைக்க முடிவு செய்துள்ளது

### ஸ்மார்ட் கம்பங்கள்




- சென்னை கார்ப்பரேஷன் நகரின் பல்வேறு பகுதிகளில் "ஸ்மார்ட் கம்பங்கள்" (Smart poles) நிறுவ உள்ளதாக தெரிவித்துள்ளது.
- இதுபோன்ற 50 கம்பங்களை நகரம் முக்கியமான இடங்களில் பொருத்த உள்ளதாக ஆணையர் தெரிவித்தார். இந்த ஸ்மார்ட் கம்பங்களில் மழை அளவீடு, பொது முகவரி அமைப்பு, கேமரா மற்றும் மாசுபாட்டைக் கண்காணிக்கும் உபகரணங்கள் இருக்கும்.
- "ஸ்மார்ட் கம்பங்கள்" முக்கியமான சாலைகளில் போக்குவரத்து குறித்த தரவுகளை சேகரிக்கும்.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



### தீனதயாள் அந்தோதயா யோஜனா

- தீனதயாள் அந்தோதயா யோஜனா-தேசிய சுய உதவிக் குழுக்கள் தயாரித்த தயாரிப்புகளை இ-சந்தையில் விற்பனை செய்வதற்காக இந்திய அரசு பிளிப்கார்ட்டுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் 44 லட்சம் பெண்களைக் கொண்டுள்ளது.

### தீனதயாள் அந்தோதயா யோஜனா குறிப்பு

- திறன் பயிற்சிகள் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கும் ஒரு தளம்
- சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு
- நகர்ப்புற ஏழைகளுக்கு மானியம் வழங்குதல்
- நகர்ப்புற வீடற்றவர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்தி தருதல்.

### 27வது தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ்

- இந்தியாவின் துணை ஜனாதிபதி ஸ்ரீ வெங்கய்யா நாயுடு தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸின் 27வது பதிப்பில் கலந்து கொண்டார்.
- திருவனந்தபுரத்தில் நடைபெற்ற. இதன் மையக்கருத்து: 'Science, Technology and Innovation for a clean, green and healthy Nation" என்பதாகும்.

### தேசிய குழந்தைகள் அறிவியல் காங்கிரஸ்

- இது கடந்த 1993ஆம் ஆண்டு முதல் இது இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பு தேசிய கவுன்சில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை இணைந்து ஏற்பாடு செய்தது.

### ரயில்வே பாதுகாப்புப் படையின் பெயர் மாற்றம்

- ரயில்வே பாதுகாப்புப் படையின் (ஆர்பிஎஃப்) பெயர், இந்திய ரயில்வே பாதுகாப்பு படை பணி (ஐஆர்பிஎஃப்எஸ்) என்று மாற்றப்பட்டுள்ளது.
- ரயில்வே பாதுகாப்புப் படைக்கு குரூப்-ஏ அந்தஸ்து வழங்கப்பட்டதையடுத்து, ரயில்வே பாதுகாப்புப் படையின் பெயர் இந்திய ரயில்வே பாதுகாப்பு படை பணி என மாற்றியமைக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

### ரயில்வே பாதுகாப்பு படை

- தொடக்கம் – 27 ஜுலை 1872
- தலைமையகம் – டெல்லி
- சட்டம் – ரயில்வே பாதுகாப்பு படை சட்டம் 1957

### அடல் கிசான் - மஜ்தூர் திட்டம்

- ஹரியானா மாநிலத்தில் முன்னாள் வாஜ்பாயின் பெயரில், 10 ரூபாயில் உணவளிக்கும் திட்டத்தை முதல்வர் மனோகர் லால் கட்டார் தொடங்கி வைத்துள்ளார்.
- 7 மாநிலங்களில் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கும் வகையில் 'அடல் ஜல் யோஜனா' என்ற திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- மேலும் வாஜ்பாயை கவுரவிக்கும் வகையில் இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள ரோடாங் சுரங்கப் பாதைக்கு அடல் சுரங்கபாதை என பிரதமர் பெயரிட்டார்.
- தொடர்ந்து, வாஜ்பாயின் பெயரில் தொடங்கவுள்ள பல்கலைக்கழகத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவின் வாஜ்பாய்க்கு புகழ் சேர்க்கும் வகையில் 25 அடியில் வெண்கலச் சிலை திறக்கப்பட்டது.

### நாகலாந்தில் ஆயுதப்படை சிறப்புச் சட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்பு

- ஆயுதப்படை (சிறப்பு அதிகாரங்கள்) சட்டத்தின் கீழ், டிசம்பர் 30 முதல் மேலும் 6 மாதங்களுக்கு வடகிழக்கு மாநிலமான நாகலாந்து முழுவதும் "பதற்றம் மிகுந்த பகுதி" என்று மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் நிகழும் கிளர்ச்சி மற்றும் வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்காக கடந்த 1958-ஆம் ஆண்டு ஆயுதப் படை சிறப்பு அதிகாரங்கள் சட்டம் கொண்டு வரப்பட்டது.

### குஜராத் சிங்கம் கணக்கெடுப்பு 2020

- இந்திய வனவிலங்கு அமைப்பு 2020 மே மாதம் ஆசிய சிங்க கணக்கெடுப்பை நடத்த உள்ளது. இந்த கணக்கெடுப்புக்காக 10,000 கேமராக்கள் பயன்படுத்த உள்ளன.
- இதற்கு தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் தொழில்நுட்பத்தை பயன்படுத்த உள்ளன.

#### ஆசிய சிங்கம்

- ஆசிய சிங்கம் உலகிலேயே இந்தியாவின் கிர் காடுகளில் மடடம் தான் வாழ்கின்றன ஐ.யூ. சி.என் வட்டியலில் இது "அழிந்து வரும் இனங்களின்" பட்டியலில் உள்ளது.

### "டாம்னி" உதவி எண்

- உத்தரபிரதேச மாநில சாலை போக்குவரத்து கழகம் பெண்கள் பாதுகாப்பிற்காக "டாமினி" என்ற அவசர உதவி எண்ணை அறிமுகம் செய்துள்ளது.
- நிர்பயா யோஜனா கீழ் இந்த அவசர உதவி பெறும் எண்ணை அறிமுகம் செய்துள்ளது. மகளிர் அலுவலர்கள் 9 மணி முதல் மாலை 6 வரை இதை கண்காணிப்பார்கள்.

### பயணிகள் தகவல் அமைப்பு

- தென் மத்திய ரயில்வேயில் ஆந்திராவின் விஜயவாடா பிரிவின் அனகபள்ளே ரயில் நிலையத்தில் இந்திய ரயில்வே தகவல் அமைப்பு முறையை அறிமுகப்படுத்தி உள்ளது.

### சர்வதேச புத்தக கண்காட்சி 2020

- தேசிய புத்தக அறக்கட்டளை அமைப்பு சர்வதேச புத்தக கண்காட்சி டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளது. 42 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெறுகிறது. மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் இக்கண்காட்சியை நடத்துகிறது.
- இக்கண்காட்சி ஜனவரி 4 முதல் 12 வரை நடைபெற்றது.

### உலகின் இரண்டாவது உயரமான சிலை

- குஜராத் மாநில முதலமைச்சர் விஜய் ரூபானி உலகின் இரண்டாவது மிக உயரமான சர்தார் வல்லபாய் படேலின் சிலையை அகமதாபாத்தில் திறந்து வைத்தார்.
- அகமதாபாத்தில் வைஷ்னோதேவி வட்டத்திற்கு அருகிலுள்ள சர்தர்தம் வளாகத்தில் 70 ஆயிரம் கிலோ கிராம் எடையுள்ள 50 அடி உயர வெண்கல சிலை திறந்து வைக்கப்பட்டது.

### ஒருங்கிணைந்த உதவி எண் - 139

- பயணங்களின்போது பயணிகளின்விரைவான குறைகள் மற்றும் விசாரணைகளுக்காக இந்திய ரயில்வே ஒருங்கிணைந்த உதவி எண் 139ஐ அறிமுகம் செய்துள்ளது.
- இந்த உதவி எண் 12 மொழிகளில் கிடைக்கும், மேலும் இதன் மூலம் விபத்துகள், குறைகள், புகார்கள் பற்றி தெரிவிக்கலாம்.

### *"Cyber safe women"*

- சமூக சீர்த்திருத்தவாதியான சாவித்ரிபாய் பூலேவின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் மகாராஷ்டிரா அரசு "Cyber Safe Women" பிரசாரத்தை தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த முயற்சியின் முக்கிய நோக்கம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான இணைய குற்றங்களை குறைப்பதாகும்.

### முதல் பட்டு பதப்படுத்தும் தொழிற்சாலை

- காதி மற்றும் கிராம தொழில் ஆணையம் குஜராத்தில் முதல் "பட்டோலா சேலை" (PATOLA SAREE) உற்பத்தி பிரிவை திறந்து வைக்கப்பட்டது.
- இது பட்டு நூல் உற்பத்தி செலவைக் குறைக்க உதவும், மேலும் படோலா புடவைக்கான மூலப்பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும்.
- பட்டோலா என்பது குஜராத்தின் சிறப்புமிக்க வர்த்தக முத்திரை சேலை. ஒரு காலத்தில் அரசு குடும்பத்தார் மட்டுமே அணிந்திருந்தனர்.

### ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம்

- பெங்களூரில் உள்ள, டி.ஆர்.டி.ஓ. எனும் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில், அமைக்கப்பட்ட ஐந்து விஞ்ஞானிகளின் பாதுகாப்பு ஆராய்ச்சி ஆய்வகங்களை, பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இளம் விஞ்ஞானிகளுக்கு ஆய்வகங்கள் திறக்கப்பட்டுள்ளது.
- மும்பை, பெங்களூர், சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத் ஆகிய நகரங்களில் தொடங்கி வைக்கப்பட்டன.

### 107வது இந்திய அறிவியல் மாநாடு

- 107-வது இந்திய அறிவியல் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி பெங்களூருவில் தொடங்கி வைத்தார்.
- அறிவியல், தொழில்நுட்பம், பருவநிலை மாற்றம், பல்லுயிர் பெருக்கம் உள்ளிட்ட தலைப்புகளில் 5 நாட்கள் நடைபெறும் மாநாட்டில் பல்வேறு நாடுகளை சேர்ந்த விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர். மையக்கருத்து: 'science and technology: rural development'.
- அறிவியல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றமே நாட்டின் வளர்ச்சியை தீர்மானிக்கும் என பெங்களூரு அறிவியல் மாநாட்டில்பிரதமர்நரேந்திரமோடி தெரிவித்தார்.

### முதலாவது ஆமை மறுவாழ்வு மையம்

- நன்னீர் ஆமைகளுக்கான மறுவாழ்வு மையம் (ஜனவரி 2020) பீகாரின் பாகல்பூர் வனப் பகுதியில் திறந்து வைக்கப்பட உள்ளது. அரை ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த மையத்தில் ஒரே நேரத்தில் 500 ஆமைகளுக்கு அடைக்கலம் கொடுக்க முடியும்.
- காயமடைந்த அல்லது நோயால் பாதிக்கப்பட்ட ஆமைகளுக்கு இந்த மையத்தில் சிகிச்சை அளிக்கப்படும். பின்னர் அதன் இயற்கை வாழ்விடங்களுக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்படும்.
- தடுப்பாணைகள், மாசுகள், சட்ட விரோதமாக வேட்டையாடுதல் போன்ற காரணங்களால்

### ஆரோகியாஸ்திரி திட்டம்

- ஆந்திரபிரதேச மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டம் எலுருவில் ஒய்.எஸ்.ஆர் ஆரோக்யாஸ்திரி திட்டத்தை முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி துவங்கி வைக்க உள்ளார்.
- இந்த புதிய சுகாதார திட்டத்தின் கீழ் ஒரு கோடி தனிநபர்கள் பயனடைவார்கள். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 2059 நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட உள்ளது.
- இந்த திட்டம் 2020 ஏப்ரல் மாதத்தில் இருந்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் விரிவுப்படுத்தப்படும்.
- ஆண்டு வருமானம் ரூ.5 லட்சம் கீழ் வரையுள்ள குடும்பத்தினர்கள் பயன் பெற முடியும். சிகிச்சை செலவு ரூ.1000க்கும் மேல் இருக்கும் நபருக்கு இலவச சிகிச்சை வழங்கப்படும்.

### உலகளாவிய கடல்சார் சுற்றுச்சூழல் சந்திப்பு

- கடல் சுற்றுச்சூழல் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் (MECO) மூன்றாவது சர்வதேச கருத்தரங்கம் கொச்சியில் நடைபெற உள்ளது. உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகள், மீன்வள ஆராய்ச்சியார்கள் கடல் உயிர் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் கடல்சார் ஆய்வாளர்கள் இந்த சந்திப்பில் பங்கேற்க உள்ளன.

- இந்த கருத்தரங்கின் முக்கிய நோக்கம் நிலையான அபிவிருத்தி இலக்கு 14ல் கவனம் செலுத்துவதாகும். இந்த நிலையான வளர்ச்சி இலக்கு 14 "பெருங்கடல்களையும் அதன் வளங்களையும் நிலையான வளர்ச்சிக்காக பாதுகாப்பாக பயன்படுத்துவது" என்பதாகும்.

### முதல் விவசாய அறிவியல் மாநாடு பெங்களூரில் நடைபெற்றது

- இந்திய அறிவியல் மாநாட்டின் 107வது பதிப்பை பிரதமர் நரேந்திர மோடி ஜனவரி 3, 2020 அன்று பெங்களூரில் துவங்கி வைத்தார்.
- இதில் முதல்முறையாக விவசாய அறிவியல் மாநாடு *(Farmer Science Congress)* தொடங்கி வைத்தார். இதே நிகழ்ச்சியில் யோகா அறிவியல் கூட்டத்தையும் *(Yoga Science meet)* தொடங்கி வைத்தார்.

#### விவசாய அறிவியல் மாநாடு

- விவசாய அறிவியல் மாநாடு 107வது ஆண்டு இந்திய அறிவியல் மாநாடு வரலாற்றில் முதல்முறையாக நடைபெற்றது.
- விவசாய அறிவியல் மாநாட்டின் மூன்று வேறுபட்ட மையக்கருத்துகளை கொண்டு உள்ளது.
  - விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க மற்றும் தொழில் முனைவோர்களை ஒருங்கிணைத்தல்
  - காலநிலை மாற்றம், உயிர் பன்முகத்தன்மை, பாதுகாப்பு
  - விவசாயிகளின் துன்பங்களை அகற்றுதல் விவசாயிகளின் அதிகாரமளித்தல், கிராமப்புற உயிர் தொழில் முனைவோர் ஊக்குவித்தல்.

### குடியுரிமைக்காக புலம் பெயர்ந்தோரை பட்டியலிடும் முதல் மாநிலம்

- புதிய குடியுரிமை திருத்தச்சட்டத்தின்கீழ் தகுதி பெறுவதற்காக பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து புலம்பெயர்ந்தோரை பட்டியலிடுவதற்காக பட்டியலை தயாரித்த இந்தியாவின் முதல் மாநிலம் உத்திரபிரதேசம் ஆகும்.

### தேசிய கட்டண கொள்கை குறித்து அமித்ஷா தலைமையில் குழு

- முன்மொழியப்பட்ட தேசிய கட்டணக் கொள்கை 2016 குறித்து விவாதித்து ஆய்வு செய்ய உள்த்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- 10 பேர் அடங்கிய அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் இரண்டு அமைச்சர்களுக்கு சுதந்திரமாக உரிமை எடுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

### பார்வையற்றோர்க்கான வழிகாட்டும் வசதி

- பார்வையற்றோருக்கான வழிகாட்டும் வசதிகளை தொடங்கி உள்ள நாட்டின் ஐந்தாவது ரயில் நிலையம் சண்டீகர் ரயில் நிலையம் வடக்கு இந்தியாவில் இந்த வசதி தொடங்கப்பட்ட முதல் ரயில் நிலையம் ஆகும். இது இந்திய ரயில்வேத் துறை அனுப்பரயாஸ் என்ற தனியார் நிறுவன உதவியுடன் தொடங்கி வைக்கப்பட்டது.

### *" 2020 Year of Mobility"*

- மத்திய தொழில் துறை பாதுகாப்பு படை *(Control Industrial Security Force)* 2020ஆம் ஆண்டை *"Year of Mobility"* என அனுசரிப்பதாக தெரிவித்துள்ளது.
- 2020ஆம் ஆண்டில், மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை அவர்களின் குடும்பங்களுக்கு உள்கட்டமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

#### மத்திய தொழில்துறை பாதுகாப்பு படை

  - தொடக்கம் – 10 மார்ச் 1969
  - அமைச்சகம் – உள்துறை அமைச்சகம்
  - பணி – துறைமுகங்கள், விமான நிலையங்கள், நினைவு சின்னங்கள், அணுமின் நிலையங்கள், விண்வெளி நிறுவனங்களை பாதுகாக்கிறது.

**உலகளாவிய முதலீட்டாளர் சந்திப்பு *ASCEND 2020'***

- கேரள மாநில அரசு உலகளாவிய முதலீட்டாளர் சந்திப்பு! ASCEND 2020 –ஐ கொச்சியில் நடத்தியது.
- இதில் ரூ.100 கோடிக்கு மேல் முதலீடு செய்ய 18 மெகா திட்டங்கள் மற்றும் 9000க்கும் மேற்பட்ட மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு வழங்க வாய்ப்புகள் உருவாக்கி உள்ளது.
- இந்த மாநாட்டை கேரள முதலீட்டு போர்டல் (Invest Kerala Portal) என்ற அமைப்பு ஏற்பாடு செய்தது.

**தேசிய வர்த்தகர்கள் மாநாடு**

- தேசிய வர்த்தகர்கள் மாநாடு, டெல்லியில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார். அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.
- இதில் இந்தியாவின் பொருளாதாரத்தை ஐந்து மில்லியன் டாலர்களை உயர்த்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

**நிலக்கரி சுரங்க ஏல நடைமுறைகளை எளிதாக்க அவசரச் சட்டம்**

- நிலக்கரி சுரங்க ஏலத்தில் உள்ள கட்டுப்பாடுகள், நடைமுறைகளை எளிதாக்கும் அவசரச் சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.
- இதன் மூலம் சர்வதேச நிறுவனங்கள் இந்திய நிலக்கரிச் சுரங்கத் துறையில் களமிறங்க முடியும்.
- இதில் நிலக்கரி சுரங்க ஏலம் தொடர்பான விதிகளைத் தளர்த்தி எளிதாக்குவது, வடகிழக்கு மாநிலங்களில் குழாய் மூலம் எரிவாயு திட்டத்தை செயல்படுத்த ரூ.5,559 கோடி ஒதுக்குவது, குஜராத்தில் ஆயுர்வேத கல்வி மற்றும் ஆய்வு மையத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளிப்பது உள்ளிட்டவற்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**மூத்த குடிமக்களுக்கு வீட்டிற்கே ரேஷன் பொருள் விநியோகம்**

- மத்திய பிரதேசத்தில் தனிமையில் வசிக்கும் மூத்த குடிமக்களின் நலன் கருதி, பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நியாய விலைக் கடை பொருள்களை அவர்களின் வீட்டிலேயே விநியோகிக்க மாநில அரசு திட்டமிடப்பட்டுள்ளது.
- தனிமையில் வசிக்கும் 75 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் வீடுகளுக்கே நியாய விலைக் கடை பொருட்களை நேரடியாக எடுத்துச் சென்று விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**அம்மாவோதி திட்டம்**

- ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி அம்மாவோதி திட்டத்தை சித்தூரில் தொடங்கி வைக்கிறார். இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் 43 லட்சம் தாய்மார்களுக்கு நிதி உதவியாக ரூ.15000 வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

**உள்நோயாளிகளை பராமப்பு துறையில் அதிக பதிவுகள் செய்த மாநிலம் ஜம்மு**

- நாட்டிலேயே அதிகமான உள்நோயாளிகள் பராமரிப்பில் (Impatient Department) பதிவு செய்தவர்களில் ஜம்மு & காஷ்மீர் முதலிடத்தில் உள்ளது.
- இந்த அறிக்கையை தேசிய சுகாதார அமைப்பின் வளங்கள் மையம் (NHBRC) வெளியிட்டு உள்ளது.
- ஜம்மு & காஷ்மீர் மாநிலம் கிராமப்புறங்களில் 96% பொது சுகாதார வசதிகளை வழங்குவதாக தெரிவித்துள்ளது.

**குடியுரிமை திருத்தச் சட்டம் முதல் சிறுபான்மையினர் ஆணை கருத்தரங்கம்**

- குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பான சந்தேகங்களைத் தீர்க்க உத்தரப் பிரதேசத்தில்

கருத்தரங்கம் நடத்த தேசிய சிறுபான்மையினர் ஆணையம் முடிவு செய்துள்ளது.

- குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பாக நடத்தப்படும் முதல் கருத்தரங்கம் லக்னௌவில் நடைபெறவுள்ளது.
- மேற்கு வங்க மாநிலத்திலும், ஹைதராபாத், மங்களூரு ஆகிய நகரங்களிலும் கருத்தரங்கள் அடுத்தடுத்த கட்டங்களாக நடத்த முடிவு செய்துள்ளது

### தற்கொலை செய்து கொள்பவர்கள் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடம்

- தேசிய குற்ற பதிவு பணியக (National Crime Records Bureau) ஆண்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதன்படி தற்கொலை செய்து கொள்பவர்கள் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. நாடு அளவில் ஒப்பிடும் போது தமிழ்நாடு 10.3% பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2018ஆம் ஆண்டு தொடர்ந்து தற்கொலை செய்து கொண்ட மாநில பட்டியலில் முதல் மூன்று மாநிலங்கள்**

| மாநிலம் | தற்கொலை | இரண்டு முக்கிய காரணங்கள் | |
|---|---|---|---|
| | | உடல்நல குறைவு | குடும்ப பிரச்சனை |
| மகாராஷ்டிரா | 17,972 | 3,930 | 6,072 |
| தமிழ்நாடு | 13,896 | 3034 | 6433 |
| மத்திய பிரதேசம் | 11,775 | 2276 | 3649 |

- இதே அமைப்பு பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பட்டியல் (Anuual Crime in India Report 2018) வருடாந்திர அறிக்கையை வெளியிட்டது. இதில் முதல் ஐந்து மாநிலங்கள் மேற்கு வங்காளம், அசாம், அருணாச்சல பிரதேசம், மேகாலயா மற்றும் சிக்கிம் ஆகும்.
- இதில் 2017 ஆம் ஆண்டு அறிக்கைபடி பெண்களுக்கு எதிரான குற்றங்களில் 3,59,849 வழக்குகள் பதிவாகி உள்ளன. இதில் உத்தரபிரதேசம் 59,455 வழக்குகளை கொண்டு முதல் இடத்தில் உள்ளது.

### முதல் சூரிய ஒளி சக்தி மற்றும் திட்டங்கள் அறிமுகம் : ரயில்வே அமைச்சகம்

- 2021-22க்குள் மண்டல ரயில்வேக்கு 1000 மெகாவாட் சூரிய சக்தியையும் 200 மெகா வாட் காற்றாலை மின்சக்தியையும் பெறுவதற்கான திட்டங்களை இந்திய ரயில்வே அறிவித்துள்ளது.
- மேலும் டிசம்பர் 2021க்குள் காஷ்மீரின் காட்ரா மற்றும் பன்ஹாலி நிலைய ரயில்வே நெட்வொர்க் மூலம் இந்தியாவின் பிற பகுதிகளுடன் இணைக்கப்பட உள்ளது.
- ரயில்வே நிலையங்கள் மேல் 500 மெகாவாட் சூரிய தகடுகள் பொருத்த திட்டமிட்டுள்ளது.

### பருப்பு வகைகள் 2020 மாநாடு

- இந்தியா பருப்பு வகைகள் மற்றும் தானியங்கள் சங்கம் நடத்தும் ஐந்தாவது பருப்பு வகைகள் 2020 மகாராஷ்டிரா மாநிலம் லோன்வாலா என்ற நகரில் பிப்ரவரி 12, 2020 முதல் பிப்ரவரி 14, 2020 வரை நடைபெற உள்ளது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இதன் முக்கிய நோக்கம் ஏற்றுமதியை அதிகரித்தல், அறுவடைக்கு பிந்தைய வேளாண்மை, மதிப்பு கூட்டல் ஆகியவற்றை இந்த மாநாட்டில் விவாதிப்பது இதன் நோக்கமாகும்.
- இந்தியா பருப்பு நுகர்வோரில் உலகின் மிகப்பெரிய நாடாகும்.

### வனங்களில் வர்த்தக திட்டம்

- வனங்கள் ஆலோசனை குழு சமீபத்தில் அரசுக்கு அளித்த அறிக்கையில் வனப்பகுதியில் கிடைக்கும் மூலங்களை வனப்பகுதிகளின் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வர்த்தகமாக மாற்றிக்கொள்ள அரசுக்கு ஆலோசனை வழங்கி உள்ளது.
- தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி வழங்கப்படாமல் இருக்கும் நிலையிலிருந்து நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படும்.

- வனப்பகுதிகளை அதிகரிக்கும் திட்டத்திற்கு அரசு சாரா அமைப்புகளை பயன்படுத்தி கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.
- "பசுமை கடன் திட்டம்" (Green Credit Card) போன்றவை துவங்கப்பட உள்ளது.

**இறக்குமதி உரங்களின் தரத்தை சோதிக்க நடமாடும் ஆய்வகம்**

- இறக்குமதி செய்யப்பட்ட உரங்களின் தரத்தை சோதிக்க துறைமுகங்களில் நடமாடும் ஆய்வகங்களை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- ஹரியாணா மாநிலத்தின் ஃபரிதாபாதில் இயங்கி வரும் மத்திய உர கட்டுப்பாடு மற்றும் தர மையம் (சிஎஃப்சிகியூஐ) மற்றும் வேளாண் துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மூன்று மண்டல மையங்களில் மட்டும் மேற்கொள்ளப்படுகிறது.

**அமில தாக்குதல் வழக்குகளில் தரவரிசையில் மேற்குவங்க மாநிலம் முதல் இடம்**

- தேசிய குற்ற பதவி பணியகரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த 2018ஆம் ஆண்டின்படி அமில தாக்குதல்கள் அதிகம் நடைபெற்ற மாநிலங்களின் தரவரிசையில் மேற்கு வங்க மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. நாடு முழுவதும் 288 வழக்குகள் நடந்து உள்ளதாகவும், இதில் மேற்குவங்க மாநிலத்தில் 50 நிகழ்வுகள் நடந்து உள்ளதாகவம் தெரிவித்துள்ளது.
- இதற்கு அடுத்ததாக உத்தரபிரதேசம், டெல்லி ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

**1023 விரைவு நீதிமன்றங்கள்**

- நாடு முழுவதும் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களின் பாலியல் பலாத்காரங்கள் தொடர்பான 1.60 வழக்குகளை விசாரிக்க மொத்தம் 1023 விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து உள்ளதாக சட்ட அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

**போக்சோ சட்டம்**

- குழந்தைகளை பாலியல் குற்றங்களில் இருந்து பாதுகாக்கும் இந்த போக்சோ சட்டம், கடந்த 2012ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.
- குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மரணதண்டனை வழங்க வழி செய்வது போக்சோ சட்டம்.

**நான்கு இந்திய விமான நிலையங்களுக்கு சர்வதேச அங்கீகாரம்**

- நான்கு இந்திய விமானநிலையங்கள் கரியமில வாயு வெளியேற்றுவதை குறைத்ததற்காக சர்வதேச அளவில் அங்கீகாரம் (International necognition) பெற்றுள்ளதாக இந்திய விமானப்படை ஆணையம் தெரிவித்துள்ளது.
  - நேதாஜ் சுபாஷ் சந்திர போஷ் சர்வதேச விமான நிலையம் (மேற்கு வங்காளம்).
  - பிஜ்ஜீ பட்னாய்க் சர்வதேச விமானநிலையம் (ஒடிசா)
  - லால் பகதூர் சாஸ்திரி சர்வதேச விமான நிலையம் (உத்தரபிரதேசம்)
  - திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் (கேரளா).

**மாநில எரிசக்தி திறன் குறியீடு 2019**

- மத்திய சக்தி மற்றும் புதிய மற்றும் புதுபிக்கத்தக்க ஆற்றல் திறன் மேம்பாட்டு & தொழில் முனைவு அமைச்சர் ஸ்ரீ ராஜ்குமார் சிங் மாநில எரிசக்தி திறன் குறியீடு 2019 டெல்லியில் வெளியிட்டார்.
- 97 குறிகள் அடிப்படையாக கொண்டு 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றில் எரிசக்தி திறன் முயற்சிகளின் முன்னேற்றத்தை இந்த குறியீடு கண்காணிக்கிறது.
- சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களில் ஹரியானா, கேரளா, கர்நாடகா, மகாராஷ்டிரா, இமாச்சலபிரதேசகம், உத்தரகாண்ட், பாண்டிச்சேரி மற்றும் சண்டீகர்.

### உலக முதலீட்டாளர் சந்திப்பு *"ASCEND-2020"*

- *ASCEND-2020 எனப்படும் சர்வதேச முதலீட்டாளர் சந்திப்பு கேரள மாநிலம் கொச்சியில் நடைபெற்றது.*
- *கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் இந்த மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார்.*
- *மாநில தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் ஏற்பாடு சந்திப்பின் மூலம் ஒரு இலட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக கேரள அரசு தெரிவித்துள்ளது.*

### திருநங்கைகள் பாதுகாப்பு அமலுக்கு வந்தது

- *மத்திய அரசு சமூக நீதி அமைச்சகத்தால் பாராளுமன்றத்தின் அறிமுகம் செயல்பட்டு சட்டமாக இயற்றப்பட்ட பின்னர் குடியரசு தலைவர் ஒப்புதல் பெறப்பட்டு நடைமுறைக்கு வந்துள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
- *சமூகத்தில் வாழும் திருநங்கைகள் எந்தவித ஏற்றத்தாழ்வும், துன்புறுத்தலுக்கும் ஆளாகமல் சக மனிதராய் வாழ்வதற்காகவும் பாதுகாப்பு அளிப்பதற்காக இந்த சட்டம் இயற்றப்பட்டு உள்ளது.*

### ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பில் இந்தியா பின்னடைவு

- *5 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் மற்றும் ஆண் குழந்தைகள் இறப்பில் முந்தைய ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு அதிக அளவில் பின்தங்கி உள்ளதாக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
- *ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பில் வெகு நாட்களாய் முன்னேற்றம் கண்டு வந்த நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*
- *ஜார்கண்ட், அஸ்ஸாம், ஹரியானா, உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்கள் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.*

| மாநிலம் | 5 வயதிற் குட்பட்ட பெண் குழந்தை இறப்பு | 5 வயதிற் குட்பட்ட ஆண் குழந்தை இறப்பு | இடைவெளி | 5 வயதிற் குட்பட்டவர்கள் இறப்பு விகிதம் |
|---|---|---|---|---|
| ஜார்கண்ட் | 38 | 30 | 8 | 34 |
| அஸ்ஸாம் | 51 | 45 | 6 | 48 |
| ஹரியானா | 38 | 32 | 6 | 35 |
| உத்தர பிரதேசம் | 48 | 43 | 5 | 46 |
| பீகார் | 43 | 36 | 4 | 41 |

### ராய்சினா பேச்சுவார்த்தை

- *2020 ஜனவரி இரண்டாம் வாரத்தில் புது தில்லியில் ராய்சினா புவி அரசியல் குறித்தான கருத்தரங்கமும் பேச்சு வார்த்தையும் நடைபெற்றது.*
- *பல்வேறு நாடுகளில் இருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த மாநாடு இந்திய வெளியுறவு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.*
- *ரஷ்யா, ஈரான், மாலத்தீவு, மொராகோ, ஆஸ்திரேலியா, பூடான், டென்மார்க், செக் குடியரசு, உஸ்பெகிஸ்தான், எஸ்டோனியா போன்ற நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர்.*

## சைபர் குற்றங்களை குறைக்க ஆஷ்வாஸ்த்

- *உள்துறை அமைச்சர் அமித்ஷா குஜராத் மாநிலம் காந்தி நகரில் நாட்டின் முதல் சைபர் குற்றங்களை தடுக்கும் அமைப்பான "ஆஷ்வாஷ்த்" (AASHVAST) ஐ துவக்கி வைத்தார்.*

***'AASHVAST'***

- *(VISWAS) விஷ்வாஸ் மற்றும் "நெட்ராங்" (NETRANG) ஆகியவற்றின் உதவியுடன், மாநிலம் முழுவதுமான பெண்களுக்கு எதிரான சைபர் குற்றங்களை குறைக்க "இலக்கு" நிர்ணயிக்கப்பட்டு மாநிலம் முழுவதும் உள்ள சைபர் குற்றங்களை ஒருங்கிணைத்து அதற்கு தீர்வுகள் எட்டப்பட்டுள்ளது.*

## பூர்வோதயா திட்டம்

- *மத்திய உருக்கு அமைச்சகம் சமீபத்தில் உலக தரத்திலான உருக்காலை ஒருங்கமைவு மையத்தை ஏற்படுத்த பூர்வோதயா என்ற திட்டத்தை அறிவித்துள்ளது.*
- *இந்த திட்டம் முழுவதுமாக இந்தியாவின் கிழக்கு பகுதி மாநிலங்களை பொருளாதார ரீதியாக ஒருங்கிணைப்பதை நோக்கமாக கொண்டு துவங்கப்பட்டுள்ளது.*
- *பூர்வோதயா திட்டத்தை செயல்படுத்தும் அமைப்பாக இந்தியா தொழிற்சாலைகள் கூட்டமைவு (CII) நியமிக்கப்பட்டுள்ளது.*

**நோக்கங்கள்**

- *கிழக்கு மாநிலங்கள் இணைத்து உருக்கு மையமாக உருவாக்குதல்*
- *2.5 மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்கல்*
- *உலகத்தரம் வாய்ந்த சரக்கு கையாளும் கட்டமைப்பை உருவாக்குதல்*
- *2030ம் ஆண்டிற்குள் 300 மில்லியன் டன் உலோக உருக்கு உற்பத்தி செய்யும் இலக்கை அடைய இந்த திட்டம் பயன்படும்.*

# 7 சர்வதேச நிகழ்வு



## புத்தாண்டு தினத்தில் குழந்தைகள் பிறப்பு உலக அளவில் இந்தியா முதலிடம்

- புத்தாண்டு தினத்தன்று உலக அளவில் இந்தியாவில்தான் அதிக குழந்தைகள் பிறந்திருப்பதாக ஐ.நா. குழந்தைகள் நிதியம் அமைப்பு (யுனிசெப்) தெரிவித்துள்ளது.
- கடந்த 1-ம் தேதி உலக முழுவதும் 3 லட்சத்து 92 ஆயிரத்து 78 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அவற்றில் அதிகபட்சமாக இந்தியாவில் 67 ஆயிரத்து 385 குழந்தைகள் பிறந்துள்ளன. இதில் இரண்டாவது இடத்தினை சீனா பிடித்துள்ளது. அந்த நாட்டில் புத்தாண்டு தினத்தில் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 42 ஆயிரத்து 299 ஆகும்.

## JCPOA ஒப்பந்தத்தில் இருந்து ஈரான் வெளியேறியது

- கூட்டு விரிவான செயல் திட்டம் (Joint Comprehensive Plan of Action) ஒப்பந்தத்தில் இருந்து ஈரான் முழுவதுமாக வெளியேறுவதாக தெரிவித்துள்ளது. அமெரிக்க இராணுவம் ஈரானை சேர்ந்த சூலைமானியை கொன்ற பின்னர் இந்த அறிவிப்பு வெளியிட்டுள்ளது.
- இராக்கில் அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஈரானின் முக்கிய படைத் தலைவர் காசிம் சுலைமானி, ஈராக் துணை ராணுவத் தலைவர் அபுமஹதி உள்பட உயிரிழந்தனர்.

### கூட்டு விரிவான செயல் திட்டம்

- இது பொதுவாக ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் அல்லது ஈரான் ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது.
- ஈரானுக்கும், P5+1 நாடுகளுக்கும் இடையே மேற்கொண்ட ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தம் வியான்னாவில் ஜூலை 14, 2015ல் மேற்கொள்ளப்பட்டது.

## உக்ரைன் விமானம் வெடித்ததில் 176 பேர் மரணம்

- ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள இமாம் கொமேனி சர்வதேச விமான நிலையத்திலிருந்து போயிங் 737 ரக விமானம் உக்ரைனின் கீவ் நகருக்கு புறப்பட்டது. உக்ரைன் சர்வதேச விமான நிறுவனத்துக்கு சொந்தமான இதில் 9 விமான ஊழியர்கள் மற்றும் 167 பயணிகள் என மொத்தம் 176 பேர் இருந்தனர்.

## பெட்ரோ சான்செஸ் ஸ்பெயின் பிரதமராகிறார்

- பெட்ரோ சான்செஸ் ஸ்பெயின் நாட்டின் பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். 1970ஆம் ஆண்டு மக்களாட்சிக்கு பிறகு ஸ்பெயின் நாட்டின் முதல் கூட்டணி அரசு மைக்க உள்ளார். மன்னர் பெலிப்பெ VI முன் பிரதமராக உறுதி மொழி ஏற்றுக்கொண்டார்.

## பலமுறை வந்து செல்வதற்கான விசா அறிமுகம்

- ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் பல முறை வந்து செல்வதற்கான நுழைவு இசைவு (விசா) முறையை அந்த நாடு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த விசாவைப் பயன்படுத்தி, அனைத்து நாட்டவர்களும் அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகளுக்கு எத்தனை முறை வேண்டுமானாலும் அந்த நாட்டுக்கு வந்து செல்லலாம்.
- ஐக்கிய அரபு அமீரகத்தில் மாபெரும் வர்த்தக கண்காட்சியை நடைபெறவிருக்கும் நிலையில் இந்த புதிய விசா முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**உலகின் மிகவும் சக்திவாய்ந்த பாஸ்போர்ட்**

- உலகின் மிகவும் சக்திவாய்ந்த பாஸ்போர்ட்டுகளின் பட்டியலில் இந்த ஆண்டு ஜப்பான் முதலிடத்தை எட்டியுள்ளது.
- உலகின் அதிக செல்வாக்கு மிகுந்த பாஸ்போர்ட்டுகளின் பட்டியலை அவ்வப்போது வெளியிடும் ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் நிறுவனம் தற்போது புதிய தசாப்தத்தின் முதல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- குறித்த பட்டியலில் முதலிடம் பிடித்துள்ள ஜப்பான், 191 நாடுகளுக்கு விசா இல்லாத அல்லது நேரடியாக விசா பெறும் வாய்ப்பை வழங்கி வருகிறது.
- இந்தியா இந்தாண்டு (2020) 84வது இடத்தில் உள்ளது. இந்தியா 58 நாடுகளுக்கு இலவச விசா வழங்குகிறது. இதில் பாகிஸ்தான் 104வது இடத்தில் உள்ளது.

**பல்கலைக்கழகத்துக்கு ஜெயலலிதாவின் பெயர் சூட்டப்பட உள்ளது**

- தமிழ்நாட்டில் உள்ள தமிழ்நாடு மீன்வளம் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு இசை மற்றும் கலை பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பெயர்களை “தமிழ்நாடு டாக்டர் ஜெயலலிதா மீன்வளம் பல்கலைக்கழகம்“ மற்றும் “தமிழ்நாடு டாக்டர் ஜெயலலிதா இசை மற்றும் கலை பல்கலைக்கழகம்“ எனப் பெயர் மாற்றம் செய்ய தமிழ்நாடு சட்டப்பேரவையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

# 8 தமிழ்நாடு



### தூய்மை நகரங்கள் பட்டியல் :

### முதல் மூன்று இடங்களில் தமிழகம்

- தூய்மைக்கான சர்வேயில், குறைந்த மக்கள்தொகை நகரங்கள் பிரிவில் தெற்கு மண்டலத்தில் தமிழகத்தில் உள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மேலத்திருப்பந்துருத்தி, டி.கல்லுப்பட்டி, தேனி மாவட்டத்தில் உள்ள கங்குவார்பட்டி ஆகியவை தரவரிசையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளதாக மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.
- 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை மக்கள்தொகை கொண்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் முதலாவது காலாண்டுக்கான தூய்மை சர்வேயில் தேனி மாவட்டத்தில் உள்ள சின்னமனூர் முதலிடமும், இரண்டாவது காலாண்டுக்கான சர்வேயில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள திருவதிபுரம் மூன்றாமிடமும் பெற்றுள்ளது.
- 50 ஆயிரம் முதல் 1 லட்சம் மக்கள்தொகை கொண்ட நகர்ப்புற பகுதிகளில் முதலாவது காலாண்டு தூய்மை சர்வேயில் நாமக்கல் முதலிடம், திருவள்ளூர் மூன்றாமிடம், இரண்டாவது காலாண்டு சர்வேயில் நாமக்கல் மூன்றாமிடம் பெற்றுள்ளது.

### ஆடுகள் ஆராய்ச்சி நிலையம்

- தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் ஆடுகள் ஆராய்ச்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ‘விஷன்-2023’ திட்டத்தை உருவாக்கினார். கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே அத்திட்டத்தின் நோக்கம்.
- ‘1962’ என்ற எண்ணில் அம்மா கால்நடை ஆம்புலன்ஸ் திட்டம், திருநெல்வேலி உள்பட 30 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது

### ஒருங்கிணைந்த கலை அமைப்பு

- “தா ஃப்யூச்சர்ஸ்“ என்ற பெயரில் ஒருங்கிணைந்த கலை அமைப்பை A.R.ரகுமான் அறிமுகப்படுத்தி உள்ளார்.

### புதிய கலை அமைப்பு

- தமிழகத்தின் கலாச்சார விஷயங்களை இளம் தலைமுறைக்கு கொண்டு செல்லும் விதமாக “தா ஃப்யூச்சர்ஸ்“ கலை அமைப்பை உருவாக்கி உள்ளனர்.

### 3 சட்டதிருத்த மசோதாக்கள் பேரவையில் அறிமுகம்

- கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களை இடைநீக்கம் செய்தல், மீன்வளப் பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனம், வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்தும் குழுவின் தனி அலுவலர் பதவிக்காலம் நீட்டிப்பு ஆகியவை தொடர்பான சட்டதிருத்த மசோதாக்கள் (Tamilnadu cooperative Societies Amendment Bill 2000) (சட்டம் 1985) சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டன

**கடலுக்கடியில் கண்ணாடி இழை கம்பிவடம் பதிக்கும் திட்டம்**

- *தொலை தொடர்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சென்னை – அந்தமான் தீவுகளுக்கு இடையே ரூ.1,224 கோடியில் சுமார் 2,250 கி.மீ. தொலைவுக்கு கடலுக்கடியில் கண்ணாடி இழை கம்பி வடம் பதிப்பதற்கான திட்டப் பணியை மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் சென்னையில் தொடக்கி வைத்தார்.*